விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 24
ஒலி 244 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 03 ஞாயிற்றுக்கிழமை (20.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## தமிழர் பகுதியில் அமைதியற்ற சூழலை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம்



### அம்பிகா சற்குணநாதன்

(லண்டன்)

இனவாதங்களை தூண்டி விட்டு பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் பக்க பதிவொன்றிலேயே அவர் இதனைத் 19

## இந்த ஆண்டின் யாழ் விருது மகாதேவக் குருக்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு ஆண்டு தோறும் வழங்குகின்ற யாழ் விருது இம்முறை சிரேஷ்ட அந்தணச் சிவாச்சாரியாரும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபருமாகிய வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ தாணு. மகாதேவக் குருக்கள் 19



## தமிழ் இளைஞன் அடித்துக் கொலை

### கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் இளைஞர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவமானது நேற்று முன்தினம் மாலை கொழும்பு - மோதரையில் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்தவரும் வெல்லம் பிட்டியில் வசிப்பவருமான அருணாசலம் 19

## விபரீத முடிவெடுத்த பல்கலை மாணவன் பலி

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கணிதப் பிரிவில் முதலிடம் பிடித்த பல்கலைக்கழக மாணவன் ஒருவன் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற் 19



# குருந்தூர் தொடர்பில் இன முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சி

### புத்த சாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க

(திருகோணமலை)

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சி செய்து வருவதாக புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கையின் கடன் மறுசீரமைப்பை சீனா தொடர்ந்து நிராகரிப்பு



(கொழும்பு)

இலங்கையின் வெளிநாட்டு கடனை மறுசீரமைக்கும் செயற்பாடுகளில் ஏனைய கடன் உரிமையாளர்களுடன்பொது பொறிமுறைக்குள் வருவதை சீனா தொடர்ந்தும் நிராகரித்து வருவதாக தெரியவருகிறது.

சீனா, இலங்கையின் பிரதான இரு தரப்பு கடன் உரிமையாளர் நாடாகும்.

இலங்கையின் வெளிநாட்டு கடனை மறுசீரமைக்கும் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக ஜப்பான், இந்தியா மற்றும் 19

## செம்மணியில் விபத்து; கணவன் பலி; மனைவி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் தண்ணீர் தாங்கி வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மனைவி படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் ஏ9 முதன்மை வீதியின் செம்மணி 19



## அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை



### விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

தற்போது நிலவும் வறட்சி காரணமாக எதிர்காலத்தில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என விவசாய அமைச்சர் 19

## பாதுகாப்பு மீளாய்வு ஆரம்பமாகும்

### ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் கால நிலை மாற்றத்தை கருத்தில் கொண்டு, விரிவான தேசிய பாதுகாப்பு மீளாய்வு ஒன்றை ஆரம்பிப்ப 19

## வடக்கில் வறட்சியால் 75, 287 பேர் பாதிப்பு

### நாடு முழுவதும் 2,11,000 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வறட்சியால் வடக்கில் 75, 287 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் நாடு முழுவதும் வறட்சியால் 2,11,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம், 04




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

# சின்னத்தம்பி சுந்தரலிங்கம்

## (செல்வம்ஸ் பற்றி சேல்ஸ் உரிமையாளர்)



தோற்றம்
26 ✽ 02 ✽ 1953

மறைவு
17 ✽ 08 ✽ 2023

பாடசாலை வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுந்தரலிங்கம் (காந்தி) அவர்கள் கடந்த 17.08.2023 வியாழக்கிழமை அன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சீவரட்ணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சுஜனின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், செல்வநாயகி, செல்லத்துரை, மகேந்திரன் மற்றும் செல்வநாயகம், செல்வராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் றஞ்சிதாதேவி, நடராஜா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

(16766)

தகவல் -
குடும்பத்தினர்
077 771 2222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய சவாலை எதிர்கொள்ளவுள்ள வடமாகாணம்

# வடக்கில் ஒரு வருடத்தில் மட்டும் 50 வைத்தியர்கள் வெளியேற்றம்

## வடக்கு சுகாதார பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

(குருமன்காடு)

**வடமாகாணத்தில் ஒரு வருடத்தில் மட்டும் 50 வைத்தியர்களும் 20 தாதியர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக வட மாகாண சுகாதாரப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

வவுனியா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் ஒரு வருட காலப்பகுதியில் 50 இற்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இவர்களில் வெளிநாட்டுக் கல்விக்காக சென்று வராதவர்களும் உள்ளனர். அத்துடன் 20 தாதியர்களும் வெளியேறியிருக்கின்றனர்.

வைத்தியர்களும் தாதியர்களும் வெளியேறுவது எமக்கு ஒரு சவாலான விடயம். அத்துடன் அண்மைக் காலத்தில் கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இங்கு ஆரம்பிக்கப்பட வேண்டிய தாதிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இவ்வருடம் தாதிய கல்லூரியில் படித்து வெளியேறுபவர்கள் இருந்தாலும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு தாதிய பயிற்சிகள் இடம்பெறாத நிலை காணப்படும். ஆகவே இந்த பகுதிக்கு புதிய தாதிகள் வரமாட்டார்கள்.

இதனால் நாம் சிக்கலான சவாலை எதிர்கொள்வோம்.

அத்துடன் வெளிநாடுகளில் தாதிகளை வரவேற்பதனால் அவர்கள் வேலையை முடிவுறுத்தி வெளியேறலாம். எனவே எதிர்வரும் காலம் சவாலை எதிர்கொள்ளும் காலமாக அமையும் என வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வெளிநாடுகளில் பணியாற்றுவதற்கான தகுதியுடைய 5000 மருத்துவர்கள் நாட்டிலிருந்து வெளியேறவுள்ளனர் எனவும் அரச மருத்து அதிகாரிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-250)



## நாளை மறுதினம் கூடவுள்ள பாராளுமன்றம்

(கொழும்பு)

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடவுள்ளது.

அண்மையில், இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூட்டத்தில் இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பாக விவாதிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெறப்படவுள்ளன.

அத்துடன், எதிர்வரும் 23 ஆம் திகதி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டம் மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டம் தொடர்பாக விவாதிக்கப்படவுள்ளன.

24 ஆம் திகதி அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம் தொடர்பாகவும் ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனம் தொடர்பில் எதிர்க்கட்சியினர் கொண்டுவரும் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் இடம்பெறும் என பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# குருந்தூர்மலை தமிழர்களின் சொத்தல்ல அது பௌத்தர்களின் சொத்து

## இனவாதத்தை கக்கும் தென்னிலங்கை எம்.பிகள்

(கொழும்பு)

பொங்கல் விழாவை நடத்தியமைக்காகக் குருந்தூர் மலை தமிழர்களின் சொத்து என்று அவர்கள் தப்புக் கணக்குப் போடக்கூடாது அது பௌத்தர் களுடைய சொத்து என தென்னிலங்கை கடும் போக்கு அரசியல் வாதிகளான சரத் வீரசேகர, உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகிய எம்.பிக்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் அவர்கள் கூறுகையில்,

குருந்தூர்மலைக்கு எவரும் வந்து வழிபடலாம். மத வழிபாட்டைக் குழப்புவது பௌத்த சிங்களவர்களின் நோக்கம் அல்ல.

சகல மதத்தவர்களையும் அவர்கள் சமமாக மதிப்பவர்கள். ஆனால், பௌத்த-சிங்களவர்களுக்குச் சொந்தமான குருந்தூர் மலையைத் தமிழர்கள் உரிமை கோருவதை ஒருபோதும் ஏற்க முடியாது.

பொங்கல் விழாவை நடத்தியமைக்காகக் குருந்தூர் மலை தமிழர்களின் சொத்து என்று அவர்கள் தப்புக்கணக்குப் போடக் கூடாது.

குருந்தூர்மலைக்கு நேற்றுச் சென்ற பௌத்த பிக்குகளும் பௌத்த சிங்கள மக்களும் அமைதியாக வழிபட்டார்கள்.

ஆனால், அங்கு பொங்கல் விழாவுக்கு வந்த தமிழர்கள், பௌத்த பிக்குவை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளி யிட்டுள்ளார்கள்.

பௌத்தர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதைத் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

குருந்தூர்மலை பௌத்தர்களின் சொத்து. அது தமிழர்களின் சொத்து அல்ல என்பதை மீண்டும் மீண்டும் ஆணித்தரமாகக் கூறுகின்றோம் என தெரிவித்துள்ளனர். (நி)

## வாக்களிக்க தகுதியானவர்கள் பெயர்களை உறுதிப்படுத்துங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

வாக்களிக்க தகுதியானவர்கள், 2023 தேருநர் பதிவேட்டில் தமது பெயர் உள்ளதா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தேசிய தேர்தல் ஆணைக்குழு பொது மக்களை வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், www.elections.gov.lk எனும் இணையத் தளத்திற்குச் சென்று விபரங்களைச் சரிபார்க்கலாம் எனவும் அதற்காக தனிநபர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும், தேருநர் பதிவேட்டில் இருந்து தகுதியான வாக்காளர்கள் யாரேனும் விடுபட்டிருந்தால், செப்டெம்பர் 4 ஆம் திகதிக்குள் கிராம சேவகர் அலுவலரை தொடர்பு கொள்ள வேண்டும்.

2005 ஜனவரி 31 அன்று அல்லது அதற்கு முன் பிறந்தவர்கள் 18 வயது நிரம்பியவர்கள், 2023 இல் தங்கள் வழக்கமான குடியிருப்பு முகவரியில் வாக்காளராகப் பதிவு செய்யத் தகுதியுடையவர்கள் என்றும் தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்த மாதத்தில் அதிகரிப்பு

(கொழும்பு)

2023 ஓகஸ்ட் மாதத்தின் முதல் 15 நாட்களில் 77,552 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

ஜூலை மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் நாளாந்த சராசரி வருகை 4,614 ஆக பதிவாகியிருந்த நிலையில், ஓகஸ்ட் மாதத்தில் அது 5170 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியா, பிரித்தானியா, சீனா ஆகிய நாடுகளை சேர்ந்த சுற்றுலாப் பயணிகளே ஓகஸ்ட் மாதத்தில் அதிகளவில் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். (நி)

# தங்கத் திரவத்துடன் இந்தியா செல்ல முயன்றவர் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

சுமார் 2 கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான தங்க திரவத்துடன், இந்தியா செல்ல முயன்ற ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்க திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வாழைத் தோட்டப் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டதாக இலங்கைச் சுங்கத்தின் பேச்சாளர் சுதத்த சில்வா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் மும்பை செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த குறித்த சந்தேகநபர் சுங்கத்தின் பேரில், எக்ஸ்ரே பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

இதன்போது, ஒரு கிலோ 280 கிராம் எடையுள்ள இந்த தங்க திரவத்தை அவரது உடலில் மறைத்து வைத்திருந்த நிலையில், சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். (நி)

## கோழி இறைச்சி விலையில் மாற்றம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஒரு கிலோ கோழி இறைச்சியை 1200 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் என கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

மக்காச்சோளத்திற்கான இறக்குமதி வரியை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளமையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் மக்காச்சோளத்தை இறக்குமதி செய்ய வாய்ப்பு உள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்தச் சலுகைகள் மூலம் எதிர்காலத்தில் ஒரு முட்டையை 40 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வனிந்து ஹசரங்கா புதிய சாதனை!



லங்கா பிரீமியர் லீக் வரலாற்றில் வனிந்து ஹசரங்கா 50 விக்கெட்டுகள் வீழ்த்தி புதிய சாதனை படைத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த லங்கா பிரீமியரின் போட்டியில் பி-லவ் கண்டி மற்றும் ஜப்னா கிங்ஸ் அணிகள் மோதின.

முதலில் ஆடிய பி-லவ் கண்டி அணி 188 ஓட்டங்கள் குவித்தது. முகமது ஹாரிஸ் 79 (49) ஓட்டங்கள் குவித்தார்.

பின்னர் களமிறங்கிய ஜப்னா கிங்ஸ் அணி வனிந்து ஹசரங்காவின் மாயாஜால சுழலில் 127 ஓட்டங்களுக்கு சுருண்டது.

ஹசரங்கா 3.2 ஓவரில் 9 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகள் கைப்பற்றினார். இதன் மூலம் அவர் LPL வரலாற்றில் 50 விக்கெட்டுகள் (மொத்தம் 55 விக்கெட்டுகள்) வீழ்த்திய முதல் வீரர் என்ற சாதனையைப் படைத்தார். (4)


தோட்டக் காணி விற்பனைக்கு

புத்தூர் நவற்கிரியில் சகல வசதியுள்ள 46 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு. (16770)

076 674 2866
077 706 6487



யாழ் (STS) வைத்தியசாலை பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான தகுந்த ஊழியர்களை எதிர் பார்க்கிறது

- களஞ்சிய உதவியாளர்
- மருந்தக ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்
- மருந்தக உதவியாளர்
- மனிதவள முகாமைத்துவ உதவியாளர்
- சிற்றூழியர்

கவர்ச்சிகரமான ஊதியத்துடன் மேலதிக அனுகூலங்களும் வழங்கப்படும். யாழ் நகரை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் மட்டும் உங்கள் சுயவிபரக்கோவையினை வைத்தியசாலை வரவேற்பு பகுதியில் கையளிக்கவும். (16769)

மேலதிக தொடர்புகளுக்கு - 077 120 3763



காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

நிலப்பரப்பு

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேதாக்கன்னி கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 14 இலட்சமும் 18 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு :-
ஜெயம் (16771)

077 814 7389
077 986 5457


# உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்றும்

## டி வில்லியர்ஸ் நம்பிக்கை



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் நவம்பர் 19 ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடைபெறவுள்ளது.

இதில் போட்டியை நடத்தும் இந் தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, தென்ஆபிரிக்கா, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், இலங்கை, நெதர்லாந்து ஆகிய 10 அணிகள் பங்கேற்கின்றன. உலக கிண்ணத்தையொட்டி எந்த அணி சம்பியன் பட்டம் பெறும் என்று முன்னாள் வீரர்கள் பலர் தங்களது கருத்துக்களை வெளியிட்டு வருகி றார்கள்.

தென்ஆபிரிக்க அணியின் முன்னாள் அதிரடி பட்ஸ்மேன் உலகக் கிண்ண போட்டியின் அரை இறுதிக்கு நுழையும் 4 அணிகள் எவை என்று கணித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறிய தாவது, நிச்சயமாக இந்திய அணி மீண்டும் உலகக் கிண்ணத்தை கைப்பற்றும் என்று நான் நினைக் கிறேன். இது ஒரு வித்தியாசமான உலக கிண்ணமாக இருக்கும்.

இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய 3 பெரிய அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும். 4 ஆவது அணியாக தென் ஆபிரிக்கா இணைய வாய்ப்பு உள்ளது. பாகிஸ்தானும் முன்னேற்றலாம்.

ஆனால் நான் தென் ஆபிரிக்கா நுழையும் என நம்புகிறேன். திறமையான வீரர்கள் அந்த அணியில் உள்ளனர். ஆசிய கண்டத்தை சாராத 3 அணி களை நான் தேர்வு செய்துள்ளேன்.

இது கொஞ்சம் கடினமானது தான். ஆனாலும் எனது முடிவில் உறுதியாக இருக்கிறேன். இந்தியா ஆடுகளங்கள் நன்றாக இருக் கும். மோசமான ஆடு களத்தை உலகக் கிண்ணத் தொடரில் பார்க்க முடியாது.

இந்தியா-இங்கிலாந்து அணிகள் இறுதிப் போட்டியில் மோத வாய்ப்பு உள்ளது. என்னை பொறுத்தவரை தென்ஆபிரிக்கா இறுதிப் போட்டிக்கு தகுதி பெற வேண்டும் என்று விரும்புகிறேன். இவ்வாறு டிவில்லியர்ஸ் கூறியுள்ளார். (4)

# வடக்கில்...

குருநாகல், இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் வறட்சியின் தாக்கம் அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வறட்சியால் 21 ,999 குடும்பங்களை சேர்ந்த 70.238 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். சங்கானை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அராலி, பொன்னாலை பகுதிகளில் சிறு கடல் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு பிடிக்கப்படும் இறால், நண்டு, சிறு மீன்களின் அளவு வெகுவாக குறைவடைந்துள்ளமையினால், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் 952 குடும்பங்களை சேர்ந்த 3.244 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 202 குடும்பங்களை சேர்ந்த 685 பேரும் வவுனியாவில் 450 குடும்பங்களை சேர்ந்த 1.120 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, வட மாகாணத்தில் வறட்சியால் 23.603 குடும்பங்களை சேர்ந்த 75.287 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 18.951 குடும்பங்களை சேர்ந்த 63.136 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 8.892 குடும்பங்களை சேர்ந்த 29.508 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 7.739 குடும்பங்களை சேர்ந்த 25.891 பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 2.320 குடும்பங்களை சேர்ந்த 7.737 பேரும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மேல் மாகாணத்தில் 5.219 குடும்பங்களை சேர்ந்த 17.073 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களில் புத்தளம் மாவட்டத்தை சேர்ந்த 2.321 பேர் உள்ளடங்குகின்றனர்.

வறட்சியான காலநிலையால் மேல் மாகாணத்தில் 2.890 பேரும் தென் மாகாணத்தில் 7.512 பேரும் மத்திய மாகாணத்தில் 1.215 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஊவா மாகாணத்தில் 469 குடும்பங்களை சேர்ந்த 1.809 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வறட்சி தொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பதுளை மாவட்டத்தில் 329 குடும்பங்களைச் சேர்ந்த 1.324 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)


பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் குரு காட்வெயர் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவை.

- மனேஜர் Lanka Tile Showroom ஆண்; சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்
- Lanka Tile விற்பனையாளர் ஆண்
- விற்பனைப் பிரதிநிதி சீமெந்து ஆண்
- கணக்குப்பதிவாளர் ஆண்/ பெண்

மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.
தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமூகம் அளிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
குறிப்பு: நிறுவனத்தில் இருந்து 5 km சுற்றளவு தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்தவர்களும் விரும்பத்தக்கது. (C-7075)

குரு காட்வெயர்
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
077 743 5265



கண்ணீர் அஞ்சலி

கே.சி.சி.சி விளையாட்டுக் கழகத்தின் கூடைப்பந்தாட்ட வீரன் சு.சுயன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் சின்னத்தம்பி சுந்தரலிங்கம்
(செல்வம்ஸ் பற்றி சேல்ஸ் உரிமையாளர்)



அவர்கள் 17.08.2023 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயர் அடைவதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தோற்றம் 1953.02.26 மறைவு 2023.08.17 (C-7097)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் (KCCCSC)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் குறைந்த

# 29 லட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்க நடவடிக்கை

நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

கொள்முதல் செய்யப்படும் நெல்லினை அரிசியாக மாற்றி குறைந்த வருமானம் பெறும் 29 இலட்சம் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன். நெல்லை கொள்வனவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு போதிய நிதி கிடைத்துள்ளதாக சபை அறிவித்துள்ளது.

கடந்த பெரும் போகத்தில் நெல் கொள்வனவு 13 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதோடு. அதன் அடிப்படையில் இந்த ஆண்டு சிறுபோகத்தில் நெல்லை கொள்வனவு செய்வதற்காக 500 மில்லியன் ரூபாவை விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதி யத்தின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில். இதுவரை 300 மில்லியன் ரூபா பெறுமதியான நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை குறிப்பிட்டுள்ளது.

இதில் மேலும் 200 மில்லியன் ரூபா எஞ்சியுள்ள நிலையில். விவசாயிகள். நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நெல்லினை விற்பனை செய்யாததால். பல மாவட்டங்களில் திறக்கப்பட்டிருந்த நெல் களஞ்சியசாலைகளை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தால் அரச வங்கிகளில் இருந்து கடனாக மேலும் 750 மில்லியன் ரூபாவை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்க அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும். விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நெல்லினை விற்பனை செய்ய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த நிதியினை பயன்படுத்தி அரிசியை கொள்வனவு செய்ய முடியும் என நெல் சந்தைப்படுத்தல் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# மரண அறிவித்தல்

அமரர்.

## இராசையா சிவராசா



கண்டாவளையைப் பிறப்பிடமாகவும் பெரியகுளம் கண்டாவளையை வதிவிடமாகவும் கொண்ட அமரர்.இராசையா சிவராசா (பரந்தன் கிளை கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம் கண்டாவளை முகாமையாளர், கிளிநொச்சி பிரதேச செயலகம் UNHCR களஞ்சியப் பொறுப்பாளர்.) அவர்கள் 16.08.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான இராசையா பாலுப்பிள்ளையின் அன்பு மகனும் வேலுப்பிள்ளை சின்னாச்சியின் அன்பு மருமகனும் இராசலட்சுமி (கண்டாவளை பிரதேச செயலகம் பெரியகுளம் ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்) அவர்களின் அன்புக் கணவரும் நிரோஜன்- சிங்கப்பூர் (பொறியியலாளர்),. நிமலன் (அவுஸ்திரேலியா-பொறியியலாளர்) அவர்களின் பாசமிகு தந்தையாரும் சங்கீதா (சிங்கப்பூர்), கோசலா (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு மாமனாரும் யனுசாந்,மிருதுலன் (சிங்கப்பூர்),கரிஷன்(அவுஸ்திரேலியா) அவர்களது அன்பு பேரனுமாவார்.

அன்னார் அமரர் கனகேஸ்வரி,புவனேஸ்வரி(இத்தாலி), இராமலிங்கம் (இத்தாலி), பாலசுப்பிரமணியம்(கரம்பகம்), யோகேஸ்வரி (கண்டாவளை), அமரர்.சிவகுமார், சோதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அமரர் தியாகராசா (ஓய்வு பெற்ற அதிபர்), பரமநாதன் (வைத்தியர்- லண்டன்), கிருஷ்ணபிள்ளை(பொறியியலாளர்- கனடா), சிவக்கொழுந்து (நீர்வேலி), சிவமணி (பிரான்ஸ்), பாய்க்கியம் (கனடா), புஸ்பநாதன் (பெரிய குளம்),திருஞானசோதி (இத்தாலி), விக்கினேஸ்வரி (இத்தாலி), நாகேஸ்வரி (கரம்பகம்), ஸ்ரீஜெயம் (கண்டாவளை), செல்வரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

காலம் சென்ற முருகேசு( திருவையாறு), அன்னலட்சுமி( பிரமந்தனாறு நாதன் திட்டம்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஸ்ரீதர் (வைத்தியர், கிளிநொச்சி பொது வைத்தியசாலை) அவர்களின் அன்பு சித்தப்பாவும் சுபாஸ் (வைத்தியர்- யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை), உதயகுமார் (மீசாலை) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் 20.08.2023 இன்று அவர்களின் இல்லத்தில் பி.ப 1 மணியளவில் நடைபெற்று, 3 மணிக்கு கண்டாவளை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**தகவல்- குடும்பத்தினர்,மனைவி, பிள்ளைகள்.**

(சி-7096)

# இராசிபலன்

20.08.2023
ஆவணி 03, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 10.18 மணிவரை
அத்தம் பின்னிரவு 3.08 மணிவரை

சுபநேரம் -9.05-10.35 மணிவரை
இராகுகாலம்-4.35-6.05 மணிவரை
நாக சதுர்த்தி விரதம், அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்- பூரட்டாதி.

வளவன்

**மேஷம்**: நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுமுண்டு.

**கடகம்**: பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு,போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**துலாம்**: மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், ஒரு சில வேலைகளுக்காக சற்று அலையநேரிடலாம்,புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள்.

**மகரம்**: ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்**: பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிள்ளைகள் வழியில் சுப விரயங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்**: எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பேச்சில் இனிமை தென்படும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கும்பம்**: மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது,மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.

**மிதுனம்**: தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி**: குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்,கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**தனுசு**: செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்யும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மீனம்**: விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு.

கண் எங்கு பார்க்கிறதோ இதயம் அங்கு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டச் செயலகத்தில் மாபெரும் தொழிற்சந்தை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டச் செயலகத்தில் மாபெரும் வேலைவாய்ப்பு தொழிற்சந்தை நிகழ்வு நேற்று இடம்பெற்றது.**





சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பின் அனுசரணையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகமும் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களமும் இணைந்து தொழிற்சந்தையை ஏற்பாடு செய்துள்ளன.

500 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல்வேறு நிறுவனங்கள் குறித்த வேலைவாய்ப்பு தொழிற்சந்தையில் பங்கேற்றுள்ளன.

கணக்கியல் துறை, காப்புறுதித் துறை, சந்தைப்படுத்தல் துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஹோட்டல் துறை, கணனித்துறை பயிற்சிநெறி, தாதியர் பயிற்சிநெறி, ஆடைத் தொழிற்சாலை, பாதுகாப்புச் சேவை, சுப்பர் மார்க்கெட் மற்றும் தனியார் உற்பத்தி நிறுவனங்கள் ஆகிய துறைகளை சேர்ந்த நிறுவனங்கள் தொழிற்சந்தையில் கலந்து கொண்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற இளையோருக்கு குறித்த தொழிற்சந்தை நல்லதொரு வாய்ப்பாக இருக்கும் என யாழ்.மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (4-33)

# மாணவனை தாக்கிய ஆசிரியர் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் க.பொ.த சாதாரண தர வகுப்பு மாணவனை தாக்கிய குற்றச்சாட்டில் அப்பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் கொடிகாமப் பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த வியாழக்கிழமை பாடசாலையின் தவணை விடுமுறையை மகிழ்ச்சியால் வெளிப்படுத்திய கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த 16 வயது மாணவனை உடற்கல்வி ஆசிரியர் கன்னத்தில் அறைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதில் மாணவன் பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

அதேசமயம் மாணவனின் தந்தை கொடிகாமப் பொலிஸாருக்கு இது தொடர்பாக வழங்கிய முறைப்பாட்டினை அடிப்படையாக வைத்து உடற்கல்வி ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான ஆசிரியரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கொடிகாமப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-30)

## ஐ.தே.கவின் பொதுக்கூட்டம் சாவகச்சேரியில் இன்று

(சாவகச்சேரி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றலுடன் ஐக்கிய தேசியக்கட்சியின் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரியில் இடம்பெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ரங்க பண்டாரவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இக்கூட்டத்தில் சமுர்த்தி கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டவர்கள், வேலைவாய்ப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-30)

# ஐ.தே.க பொதுச்செயலாளர் பாலித யாழ்.விஜயம்



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

நல்லூர்கந்தசுவாமிகோவில், ஆரியகுளம் நாகவிகாரைக்கும் நேற்று சனிக்கிழமை காலை அவர் விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தேர்தல் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களைச் சந்தித்து சமகால அரசியல் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளார். (4-33)

# நெருக்கடியிலிருந்து நாட்டை ஜனாதிபதி ரணிலே மீட்டார்

## ஐ.தே.க பொதுச் செயலாளர் வட்டுக்கோட்டையில் புகழாரம்

(அராலி)

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட பொழுது அதனை மீட்டெடுத்தவர் ரணில் விக்கிரமசிங்கவே. அந்த தருணத்தில் எந்த ஒரு எதிர்க்கட்சி தலைவரும் முன்வரவில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலி ரங்கே பண்டார தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

ரணில் ஒரு போராளி. ஆயுதமின்றி போராட்டம் செய்தவர். அவர் வடக்கு பிரச்சினையை மட்டுமல்லாது முழு இலங்கையிலும் ஏற்படும் பிரச்சினையை பற்றி பேசிய ஒருவர்.

சிறிமாவோ பண்டாரநாயக்க, மகிந்த, கோத்தா போன்றோரால் நாடுகள் பாதாளத்தினுள் தள்ளப்பட்ட பொழுதெல்லாம் அதனை மீட்டெடுத்தது ஐக்கிய தேசிய கட்சியாகும்.

நாடு பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட பொழுது டலஸ் அழகபெரும, அநுர குமார, சஜித் என அனைவரும் ஏதோ ஒரு காரணத்தை சொல்லி தப்பித்தார்கள். ஆனால் ஐக்கிய் தேசிய கட்சிக்கு ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினரே காணப்பட்டார். அவரே நாட்டை மீட்டெடுத்தார்.

தற்பொழுது இந்த நாட்டின் ஜனாதிபயின் இலக்கு 2048




இற்கு முன்னர் நாட்டினை தன்னிறைவான நாடாக மாற்றுவது. ஏன் 2048 என கேட்கலாம். இவர் ஒரு இலக்கை கொடுத்திருக்கிறார். தன்னிறைவு பெற்ற நாடாக அதற்கு முன் மாறும் என்று. அதனால் தான் மக்கள் சரியான தீர்மானம் எடுக்க வேண்டும் என கோருகின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-104)



அமரர்கள் மார்க்கண்டு விதானையார் நாகம்மா ஞாபகார்த்த பேருந்து தரிப்பிட திறப்புவிழா நேற்று ஆனையிறவு நடராசர் சிலையடி முன்பாக இடம்பெற்றது. (படம்:-மகாலிங்கம்)

# பாம்பு தீண்டி பெண் பலி

(கொழும்பு)

பசறை கோணக்கலை பகுதியில் தேயிலை தோட்டத்தில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, பாம்பு தீண்டி பெண் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குறித்த பெண் தொழிலாளி கடந்த 16 ஆம் திகதி கோணக்கலை கீழ் பிரிவில் உள்ள தோட்டப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது பாம்பு தீண்டலுக்கு உள்ளாகியிருந்தார்.

இந்த நிலையில் அவர் சிகிச்சை பலன் இன்றி நேற்று உயிரிழந்தார். (4)

# நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு தெய்வீக இசையரங்கு நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

அந்த வகையில் கொடியேற்ற தினமான நாளை 21 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு மங்கல விளக்கேற்றல், தேவாரம், செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் ஆசியுரை என்பவற்றை தொடர்ந்து மங்கல இசை ஆரம்பமாகும்.

இதன்போது நாதஸ்வரம்- செ.சபரீசன், பா.சரன்யன், ஆகி யோரும் தவில் - பி.வேந்துஷன், செ.பிருத்விகா, ஆகியோரால் இசைக்கப்படவுள்ளன. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 403
Viber 076 636 3378



# இனவாதம் தொடர்ந்தால் இரத்த ஆறு ஓடும்!

"தமிழினத்துக்கு நீதி வேண்டும் அந்த நீதி தமிழினம் தனது பூர்வீக நிலத்தில் நிம்மதியாய் வாழக் கூடியதாக இருக்க வேண்டும்."

"இது சிங்கள பௌத்த நாடு இங்கு நாம் வைத்தது தான் சட்டம்"

இந்த ஒற்றை வார்த்தையே நாட்டில் இரத்த ஆறு ஒடக் காரணம் என்பதை பேரினவாத சக்திகள் புரிந்து கொள்வார்களா, இல்லையா என்பது புரியவில்லை.

அவ்வாறு புரிந்திருப்பார்களாக இருந்தால் போர் நிறைவுற்று 14 ஆண்டுகள் கடந்த பின்பு இப்போது இனவாதத்தைக் கக்கும் போக்கில் சிங்களத் தலைவர்கள் பேசமாட்டார்கள்.

சிங்களத் தலைவர்களின் வன்மம் நிறைந்த பேச்சுக்கள் மீண்டும் நாட்டில் யுத்தம் தோன்றும் வகையில் அமைந்துள்ளன என்பதை சிங்கள மக்கள் புரிந்து கொண்டு அவர்களை நிராகரிக்க வேண்டும்.

மாறாக அவர்களின் பேச்சுக்களை ஆதரிப்பாளர்களாக இருந்தால் அது பாரிய அழிவுகளைத் தரவல்லதாகவே அமையும்.

தற்போது வன்மத்தை கக்கும் சிங்களத் தலைவர்கள் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைத்திருக்க வேண் டும் என்பதில் விருப்பம் இல்லாதவர்கள் என்பதே பொருள்.

இனியொரு முறை இந்த நாட்டில் அநியாயமாக உயிர்கள் வீழ்ந்துவிடக் கூடாது என விரும்புவார்களாக இருந்தால் நிச்சயம் அவர்கள் இவ்வாறு பேசமாட்டார்கள்.

அந்தளவிற்கு பேரினவாத சக்திகளின் வன்மப் பேச்சுக்கள் ஈரக்குலை நடுங்கும் அளவில் உள்ளது.

தமிழர் பூர்வீகங்களை சிங்களவர்களின் புராதன சின்னங்கள் என அடாத்தாய் ஆக்கிரமிப்பது முதல் தமிழினத்தை சீண்டும் வகையில் பேசுவது வரை இது சிங்கள பௌத்த நாடு எனும் மமதையில் செயற்படுவது தெட்டத் தெளிவாகத் தெரி கிறது.

வரலாற்றை சரியாகத் தெரிந்து கொள்ளாமல் தமிழினத்தின் பூர்வீகங்களை பௌத்தத்திற்குரியதாய் காட்ட முனைவது தமிழினத்தின் பண்பாடு கலாசாரத்தை சிதைக்கும் செயலாகவே தமிழினம் கருதுகிறது.

வன்மப் பேச்சுகள் நிறைந்த நிகழ்ச்சித்திட்டத்தில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, மேர்வின் சில்வா, சரத்வீரசேகர போன்றவர்களின் செயற்பாடுகள் தமிழர் மனங்களை புண்படுத்தும் வகையில் உள்ளன.

அந்தவகையில் "பௌத்த விகாரைகளில் கைவைத்தால் தமிழர்களின் தலை உருளும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மகிந்த ராஜபக்ஷவின் விசுவாசியுமான மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார்.

இவர் இவ்வாறு கூறியதற்கு எந்த சிங்கள அரசியல் தலைவர்களும் கண்டனம் எதையும் தெரிவிக்கவில்லை.

தமிழர் தலை உருளும் என ஒரு சிங்கள அரசியல்வாதி தெரிவித்தால் அவரின் நோக்கமும் சிந்தனையும் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

குருந்தூர் ஆதிசிவன் ஆலயத்தில் பொங்கல் வழிபாடுகளைச் செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில் "பௌத்த சாசனத்தைப் பாதுகாக்க குருந்தூர் மலைக்கு சிங்கள மக்கள் ஒன்று கூடி பொங்கல் விழாவை எதிர்க்க வேண்டும்" என உதய கம்மன்பில தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்கள் நீதிமன்ற அனுமதியுடன் பொங்கல் நிகழ்வை முன்னெடுக்க அதை குழப்பும் வகையில் சிங்கள மக்கள் அங்கு ஒன்றுகூடினால் எப்படியான முறுகல் நிலை உருவாகும். இச் செயற்பாடு இனக்கலவரத்தை ஏற்படுத்தும் புள்ளியாக அமைந்துவிடும் எனும் சிந்தனையிலாது அவர் கூறிய கருத்தினை எவரும் கண்டிக்கவில்லை.



ஆக, தமிழினத்துக்கு குண்டூசி அளவேனும் அதிகாரம் சென்று விடக்கூடாது என்பதில் பேரினவாத சக்திகள் கங்கனம் கட்டி நிற்பது தெளிவாகிறது.

இந்திய அரசு 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை எப்பேற்பட்டாவது அமுல்படுத்த வேண்டும் என இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் இவ்வேளையில் இனவாதத்தைத் தூண்டும் செயற்பாட்டில் ஈடுபடுவது 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை குழப்பும் வகையிலேயே அமையும். இதுதான் இனவாதிகளின் விருப்பமாகக்கூட இருக்கலாம்.

13 ஆவது திருத்த சட்ட மூலம் அமுல்படுத்தப்பட்டால் தமிழீழம் மலரும் என பேரினவாதிகள் கூக்குரல் போடுகின்றனர். அவர்கள் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது 13 ஆவது திருத்த சட்டமூலத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவே இல்லை. தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றை நீங்கள் தமிழீழத்திற்கு ஒப்பானது என கூறுகிறார்கள் என்றால் இச் சிற்றறிவை என்ன வென்று கூறிவிட முடியும்.

எது எவ்வாறோ தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு தேவை அந்தத் தீர்வு தமிழினம் சகல உரிமைகளையும் பெற்று தமது பூர்வீக நிலத்தில் நிம்மதியாக வாழக் கூடியதாய் இருக்க வேண்டும்.

விடுத்து, சிங்கள தலைவர்கள் சிங்கள மக்களை தூண்டும் பேச்சுக்களை தொடர்ந்து பேசி வன்முறைக்கு வழிவகுத்தால் அது நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஒடுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும். அவ்வளவே.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். சங்கீத பூசணம் செ.குமாரசாமி அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். ஈழத்தின் சங்கீத வித்துவான்களில் பெயர் குறித்துக் குறிப்பிடக்கூடியவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:** குருந்தூர்மலை ஆதிசிவனுக்குப் பொங்கல் நடந்தது மன ஆறுதலைத் தருகிறது. நீதிமன்றத்தின் தீர்ப்புக் காரணமாக நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் வழிபாட்டு உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கங்காணி கார்த்திகேயன் கூறி முடிப்பதற்குள் அவசரப்பட்ட சாத்திரியார் சதாசிவம்; அதுசரி, யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாகவிகாராதிபதியின்ர இடத்தில நடந்த பௌத்த-இந்து அமைப்பின் கூட்டத்தில குருந்தூர்மலையில சிவன் கோயிலைக் கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதல்லலோ.

**விதானையார்:** என்னைப்பொறுத்தவரை குருந்தூர் மலையில் சிவன் கோயில் கட்டுவதென பௌத்த-இந்து அமைப்பு எடுத்த தீர்மானம் நிறைவேற்றப்படுமாக இருந்தால், அதனை நான் வரவேற்பேன்.

பௌத்த-இந்து மதங்கள் ஒற்றுமையாக இருக்க வேணுமெண்டு விரும்பினால், குருந்தூர் மலையில சிவன் கோயிலை அமைத்து தமிழ் மக்களின் வழிபாட்டிற்கு ஊறு விளைவிக்காமல் பௌத்த தேரர்கள் பார்த்துக்கொள்ள வேணும்.

அதே நேரம் எங்கட மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா தமிழ் இனத்தினதும் சைவ சமயத்தினதும் மிகப் பெரிய பலம் என்பதை யாரலும் மறுதலிக்க முடியாது.



## மறவன்புலவு சச்சிதானந்தம் சைவத்தமிழினத்தின் பலம்

இன்றைக்கு இருக்கக் கூடிய சைவத் தமிழ்ப் பற்றாளர்களில இந்திய அரசியல் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு கதைக்கக்கூடிய வல்லமை அவரிட்ட இருக்குது.

அவரையும் நாங்கள் விமர்சித்து அவரின் செயற்பாட்டையும் அடக்கிவிட்டமெண்டால், எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

இப்ப இருக்கிற நிலையில சைவசமயம் மிகப் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது.

**பண்டிதர்:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இலங்கையில் பௌத்தத்தைப் பாதுகாக்க அரசாங்கம் இருக்குது. அதேபோல கத்தோலிக்கத்திற்கு ஏதேனும் இடைஞ்சல் என்றால் உடனடியாக வத்திக்கான் தலையிடும்.கத்தோலிக்க நாடுகள் கண்டனம் தெரிவிக்கும்.

இதே நிலைமை இஸ்லாமியாத்திற்கும் உண்டு. இஞ்ச இஸ்லாமியத்திற்கு ஒண்டெண்டால், முஸ்லிம் நாடுகள் கங்கணம் கட்டிக் கொண்டு இந்தாப்பார் எரிபொருளை நிற்பாட்டுறம் என்பினம்.

ஆனால் எங்கட சைவ சமயத்திற்கு ஒண்டெண்டால், ஒருத்தரும் கதைக்க மாட்டினம். அதால தான் குருந்தூர் மலையில விகாரை கட்டுறது. வெடுக்குநாறி மலையில இருக்கிற சிவலிங்கத்தை உடைக்கிறது என்ற அநியாயம் நடக்குது.

இந்த இடத்தில சைவ சமயத்திற்காக குரல் கொடுக்க வல்லவர்களுக்கும் நாங்கள் ஆப்பு வைச்சால், அதுவும் ஆக்கிரமிப்புக்கு உதவுறதாகத்தான் முடியும்.

அதனால எதையும் ஆராய்ந்து அதில இருக்கக்கூடிய சரி பிழைகளை சுமுகமாகக் கதைத்துத் தீர்க்க வேண்டும். அதேபோல சச்சிதானந்தம் ஐயாவும் மற்றவர்கள் தெரிவித்த கருத்துக்களை மீள் வாசிப்புக்கு உட்படுத்த வேண்டியதில்லை.

பௌத்த-சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் செயல்களால் எங்கட மக்கள் கொதித்துப்போயுள்ளனர்.

இந்த நேரத்தில பறாளாய் அரச மரத்தை அவர் நட்டார். இவர் நட்டார் எண்ட கதை தேவையில்லை. அது எங்கட தாயகத்தில இருக்கிற இடம். அதில உரிமை கோர எவருக்கும் அதிகாரம் கிடையாது. அவ்வாறு உரிமை கோரினால், அது தமிழ் மக்களைச் சீண்டுகிற செயலாகவே பார்க்கப்படும்.

ஆகையால, இது போன்ற விடயங்களில அனைவரும் நிதானமாக நடந்து கொள்ள வேணும். பண்டிதர் பரமலிங்கம் ஆக்ரோசமாகக் கூற, ஆலடி நிசப்பதமாகியது. நிசப்தத்தைக் கலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:** அதுசரி வடக்கையும் கிழக்கையும் இணைக்கக் கூடாது என்று சில முஸ்லிம் அரசியல் தரப்புக்கள் ஆளுந் தரப்போட இரகசியப் பேச்சுவார்த்தை நடத்துகினமாம்.

**சிறாப்பர்:** ஓ! அவர்கள் காரியத்தில கண்ணா இருக்கினம். ஆனால் நாங்கள் எல்லாத்தையும் போட்டுடைக்கிறம்.

**சாத்திரியார்:** என்ன சிறாப்பர் சொல்லுறியள்.

**சிறாப்பர்:** எங்கட தமிழ்த் தரப்புகளிட்ட ஒற்றுமையும் இல்லை. ஒருமித்த கருத்தும் இல்லை. இந்தியப்பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதுகிறதாக இருந்தாலே அது தொடர்பில ஏகப்பட்ட சர்ச்சை. இதுக்கு மேலால முதுமை, சம்பந்தர் ஐயாவை வாட்டுது.

இந்த நிலையில அடுத்த தலைவர் ஆர் எண்ட முடிவுகள் எதுவும் இன்னமும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில எங்கட எதிர்காலம் சின்னாபின்னப்படுகிறதைத் தவிர வேறு வழியில்லைத்தானே!

**மூப்பர்:** அது சரி கீரிமலைக்கேணி நன்னீராக மாறிய அதிசயம் நடந்ததாகக் கேள்விப்பட்டன் உண்மையோ.

**வாத்தியார்:** இஞ்சே மூப்பர்; உங்களுக்கு கீரிமலைக் கேணியில நீராடுகிற சந்தர்ப்பம் இருந்திருக்காது. கீரிமலையில இருக்கிற கேணியின்ர ஊற்று நன்னீர் என்பது பொதுவாக எல்லாருக்கும் தெரியும்.

கடலோட இருக்கிற கேணியில நன்னீர் ஊற்று இருக்கிறதாலதான் அந்தக் கேணிய ஒரு பெரும் அற்புதமாகச் சைவ மக்கள் கருதுகினம்.

இருந்தும் கேணியில ஊற்றுக் குறைகிறபோது கடல் வழி வாய்க்கால் மூலம் கடல் தண்ணி கேணிக்குள்ள விடப்படும். அதனால கேணித் தண்ணீர் கடல் உவராக இருக்கிறதே தவிர, மற்றும்படி கீரிமலைக் கேணி ஊற்று நன்னீர் தான்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



எமது மண்ணைக் காக்கும் வேப்பமர விதைகளைச் சேகரித்து அதை விருட்சமாக்கும் திட்டங்கள் முன்வைக்கப்படுமா?

**றிதுஷ் — வடமராட்சி**

**13 ஆவது திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்படுமா வியாசரே?**

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை ஒரு தீர்வாக தமிழினம் ஏற்கவே இல்லை.

அந்த 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை தமிழீழம் என்று பேரினவாத சக்திகள் கூறுகின்றன என்றால் அதன் பொருள் என்ன என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழினத்துக்கு ஒரு குண்டூசி அளவு அதிகாரத்தைக் கூட வழங்குவதற்கு பேரினவாதிகளுக்கு விருப்பம் இல்லை.அதனால் 13 ஆவது திருத்தத்தை எதிர்க்கின்றனர்.

அதை தமிழீழம் என்று சிங்கள மக்களை குழப்புகின்றனர்.

இப்படியே போகுமாக இருந்தால் மீண்டும் இனப் போர் வெடிக்கும் வாய்ப்புகளே அதிகம்.

**சுதன் — குப்பிழான்**

**சட்டத்தை மீறும் பிக்குகளை சட்டத்தை மதிக்கச் சொல்லி பொலிஸார் கெஞ்சுவது எதற்காக வியாசரே?**

ஒருவர் சட்டத்தை மீறினால் அவர் தண்டிக்கப்பட வேண்டியவர். இதுவே ஜனநாயகம்.

ஆனால் இலங்கையில் பிக்குமார் சட்டத்தை மீறினால் ஒரு மாதிரியும் ஏனையவர் சட்டத்தை மீறினால் வேறு ஒரு மாதிரியும் நடப்பது முறையல்ல.

அவ்வாறு பிக்குமாருக்கு ஒரு நீதியும் ஏனையவருக்கு வேறொரு நீதியும் இல்லையே.

இது சிங்கள பௌத்த நாடு. இங்கு நாம் வைத்தது தான் சட்டம் எனக் கூறுபவர்கள் இருக்கும் வரை பிக்குகளின் அட்டகாசம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

எல்லாம் கடவுளுக்குத் தான் வெளிச்சம்.

**சி.சுரேசன் — பத்தமேனி**

**இன்னும் சில ஆண்டுகளில் வறட்சி ஏற்படும் என்கிறார்கள். எமது நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் வழிகள் என்ன வியாசரே?**

எம்மிடம் நீர் மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு கொஞ்சமும் இல்லை என்றே கூற வேண்டும்.

அடுத்த உலக யுத்தம் நீருக்கானதாய் இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

நாமோ இருக்கும் நீர் வளத்தை சரியாய் பயன்படுத்த தவறி அநியாயம் செய்கிறோம்.

வருடா வருடம் பொழியும் மழை நீரை சேகரித்து மண்ணைக் குளிர்விக்கத் தவறி விட அது கடலை அடைகிறது.

வீதியை உயர்த்தி, புகையிரதப் பாதையை உயர்த்தி அது தான் அபிவிருத்தி என்று முற்றுப் பெற்று நிற்கின்றோம்.

அதனால் பெய்யும் மழை நீர் குளங்களையும் ஏரிகளையும் அடையாமல் வழிந்தோடி கடலைச் சேர்ந்து விடுகிறது.

இதைத் தடுக்காவிடின் நாம் மிகக் கஷ்டப்பட வேண்டி வரும்.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**விஜயரட்ணம் — நல்லூர்**

**நல்லூர்த் திருவிழாக் காலங்களில் நெரிசலைக் குறைக்க சிவன் கோவில் வீதி கடைகளை நீக்கி இருவழிப் பாதையமைத்து தருமா யாழ். மாநகர சபை?**

நல்லூர் உற்சவ கால ஒழுங்குபடுத்தல்களை அன்று முதல் இன்று வரை யாழ்ப்பாணம் மாநகர சபை மிகத் திறம்படச் செய்து வருகிறது.


நல்லூர் கந்தனைத் தரிசிக்க வரும் பக்தர்கள் சற்று சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

சன நெரிசல் உள்ள இடங்களில் தாமாகவே இருவழிப் பாதையை அமைத்துக் கொண்டால் ஓரளவு நெரிசலைக் கட்டுப்படுத்த முடியும்.

அனைத்து விடயத்தையும் மாநகர சபைதான் செய்ய வேண்டும் என எண்ணிக் கொண்டிருப்பது சரியல்ல.

எம்மால் இயலக் கூடியதை நாம் செய்யத்தானே வேண்டும்.

போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில் நெரிசலைக் குறைக்கும் வழிவகைகளை நாமே மேற்கொள்ள வேண்டும். அதைவிடுத்து மாநகர சபையை குறை கூறி எந்தப் பிரயோசனமும் இல்லை.



தமிழர்களின் தலையை எடுப்பேன் என்கிறாரே மேர்வின் சில்வா?

**மதுமிதன் — புதுக்குடியிருப்பு**

**வியாசருக்கு உண்மையான வயது என்ன எனக் கூற முடியுமா?**

சில விடயங்கள் தெரியாமல் இருப்பது நல்லதாயும் மதிப்பு மிக்கதாயும் இருக்கும்.

அந்த விடயத்தில் வியாசரின் வயதையும் தாங்கள் அறியாமல் இருப்பது நன்று.

உங்கள் வயது 20 ஆக இருந்தால் என் வயது 30.உங்கள் வயது 60 ஆக இருந்தால் என் வயது 90.

நீங்கள் தம்பியாக இருந்தால் நான் அண்ணனாகிறேன். நீங்கள் தந்தையாக இருந்தால் நான் தாத்தா ஆகிறேன்.

எங்கே நீங்கள் கண்டுபிடியுங்கள் பார்ப்போம் எனது வயதை.

**திகான் — வடமராட்சி**

**எமது மண்ணைக் காக்கும் வேப்பமர விதைகளைச் சேகரித்து அதை விருட்சமாக்கும் திட்டங்கள் முன்வைக்கப்படுமா?**

உங்கள் திட்டம் நல்ல திட்டம் தான். ஆனால் அதன் பின் அரச மரத்துக்கு வந்த சோதனை வேப்பமரத்துக்கும் வந்து விடுமோ என்ற அச்சம் தமிழினத்திடம் இருக்குமல்லவா?

ஆதலால் இந்த விடயத்தை சற்றுப் பொறுமையாய் கையாளலாம். மருத்துவ குணம் கொண்ட வேப்ப மரம் ஒன்று வளவில் நின்றால் போதும். அந்த வீட்டில் இருக்கும் எவருக்கும் சுவாசப் பிரச்சினை எதுவும் வந்துவிடாது.

அந்தளவிற்கு வேம்பின் பலன் அதிகம்.

கொரோனா காலத்தில் வேப்பம் இலைகள் சீனாவுக்கு ஏற்றுமதி செய்ததாய் ஒரு செய்தி வந்திருந்தது.

வேம்பின் பலனை தெரிந்தால் அரச மரத்தை விட்டு விட்டு வேப்பமரப் பக்கம் திரும்பி விடுவார்கள் போல.

**மதுவன் — மீசாலை**

**தமிழர்களின் தலையை எடுப்பேன் என்கிறாரே மேர்வின் சில்வா?**

மேல்மாடி பிசகியவர்களுடன் நாம் மல்லுக்கட்டினால் நாமும் அப்படிப்பட்டவர்கள் என்றாகி விடும். ஆதலால் அமைதியாய் இருப்போம்.

மேர்வின் சில்வா தற்போது கூறிய விடயத்தை 14 வருடங்களுக்கு முன்பு கூறியிருப்பாரா? அப்படிக் கூறியிருந்தால்...?

என்ன செய்வது தமிழ் இனம் தோற்கடிக்கப்பட்ட இனமாகி நிர்க்கதியாய் நிற்கிறது. இது கண்டு வருபவர்கள், போபவர்கள் எல்லாம் கருத்துக் கூறும் அளவில் இருக்கிறது.

ஒரு குட்டிக் கருத்து. படம்: படையப்பா கூறியவர் ரஜனி.

“ உன்கிட்ட இருக்கிறவர்கள் தலையைக் கொண்டுவரச் சொன்னால் முடியைக் கொண்டு வருவார்கள்.

என்னிடம் இருப்பவர்கள் முடியைக் கொண்டுவரச் சொன்னால் தலையையே கொண்டு வருவார்கள்... ” என்ன மேர்வின் ஐயா புரிஞ்சுதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: எங்க ஊர் ராஜா

பாடகர் : டி.எம்.சௌந்தரராஜன்

இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்

இயற்றியவர்: கண்ணதாசன்



யாரை நம்பி நான் பொறந்தேன்
போங்கடா போங்க
என் காலம் வெல்லும் வென்ற பின்னே
வாங்கடா வாங்க

யாரை நம்பி நான் பொறந்தேன்....

குளத்திலே தண்ணி இல்லே
கொக்குமில்லே மீனுமில்லே
குளத்திலே தண்ணி இல்லே
கொக்குமில்லே மீனுமில்லே
பெட்டியிலே பணமில்லே
பெத்த புள்ளே சொந்தமில்லே

யாரை நம்பி நான் பொறந்தேன்...

தென்னைய பெத்தா இளநீரு
பிள்ளைய பெத்தா கண்ணீரு
தென்னைய பெத்தா இளநீரு
பிள்ளைய பெத்தா கண்ணீரு
பெத்தவன் மனமே பித்தம்மா
பிள்ளை மனமே கல்லம்மா
பானையிலே சோறிருந்தா
பூனைகளும் சொந்தமடா
சோதனையை பங்கு வச்சா
சொந்தமில்லே பந்தமில்லே

யாரை நம்பி நான் பொறந்தேன்...

நெஞ்சமிருக்கு துணிவாக நேரமிருக்கு தெளிவாக
நெஞ்சமிருக்கு துணிவாக நேரமிருக்கு தெளிவாக
நினைத்தால் முடிப்பேன் சரியாக
நீ யார் நான் யார் போடா போ
ஆடியிலே காத்தடிச்சா ஐப்பசியில் மழை வரும்
தேடி வரும் காலம் வந்தா
செல்வமெல்லாம் ஓடி வரும்

யாரை நம்பி நான் பொறந்தேன்
போங்கடா போங்க...

# டொலரின் எதிர்பார்ப்பில் ரூபாவை கைவிடுகின்றோம்

நம் தாய் நாட்டின் ரூபாவில் வாழ வேண்டிய விலை மதிப்பற்ற நிகழ்காலத்தை எங்கோ தொலைவில் தூக்கி எறிந்து விட்டு புலம்பெயர் தேசங்களினுடைய எதிர்கால டொலருக்காக எண்ணற்ற ஈழத் தமிழர்கள் தங்கள் வாழ்கையை ஏமாற்றும் முகவர்கள் ஊடாக தொலைத்து பேரழிவைச் சந்தித்துக் கொண்டு இருக்கின்றார்கள். மரக் கதிரையில் அமர்ந்தும் மனம் திருப்தியடையாமல் டொலர் ஏற்படுத்திய சுழல் கதிரைக்கு ஆசைப்பட்டதன் விளைவே இந்த நிர்க்கதி நிலைமைக்குக் காரணம்.

சமகாலத்தில் ஈழத்திலே டொலரின் தாக்கமானது எந்தளவுக்கு ஆளுகை செலுத்துகிறது என்றால் கிடுகு வேலிகள் எல்லாம் கல் மதில்களாக எழும்புகின்ற அளவுக்கு என்று கூறிவிடலாம். கொடும் யுத்தம் நடந்த காலத்தில் கூட தமது பஞ்சம், பட்டினியை ரூபாவின் வருமானத்தில் போக்கியவர்களே எம் ஈழத் தமிழ் உறவுகள். அப்போதைய காலத்தில் ஈழத்தில் ஒவ்வொரு ஊர்களிலும் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே பெரும்பாலும் டொலரின் தாக்கத்திற்கு உட்பட்டு இருந்தார்கள். அவர்களின் இரத்த உறவுகள் அனுப்பும் பணத்தில்தான் தங்கள் ஆசையை மலையளவு பெருக்கிக் கொண்டார்கள்.

டொலரின் தாக்கத்திற்கு சிறிதும் உட்படாமல் யுத்த சூழ்நிலையிலும் தங்கள் அன்றாட வாழ்வை ரூபாவின் ஊடாக செவ்வனவே மகிழ்ச்சியாக வாழ்ந்து கழித்தவர்களும் உண்டு. அவர்கள் தங்கள் சொந்த மண்ணிலே தங்கள் வியர்வை சிந்தும் உழைப்பை பெரிதும் நம்பினார்கள். அவர்களை அறியாமலே அவர்களால் டொலர் புறக்கணிக்கப்பட்டது.

எங்கு பணம் அதிகளவு ஊதிப் பெருகுகின்றதோ அங்கு நிச்சயம் அழிவும் ஏற்படுகின்றது. தர்மம் நிலை குலைந்து மனிதனை சிந்திக்க விடாது அவன் அறிவை முடமாக்கி அவனை சமூகத்தின் முன் குற்றவாளி ஆக்குகின்றது. இதுவே தமிழர்கள் செறிந்து வாழும் வடமாகாணத்தின் நிலைமையும் கூட.

ஈழத் தமிழர்களுடைய பழைய பாரம்பரியங்கள் அருகி வருவதற்கும் கலாசார சீரழிவுகளின் பிறழ்வுகள் அதிகளவு அரங்கேறுவதற்கும் புலம்பெயர் தேசத்தினுடைய டொலரின் தாக்கம் அதிகளவு ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதை நாம் எளிதில் மறுத்து விட இயலாது.

ஏன்? ஈழத் தமிழர்களின் உரிமைக்கான ஈழ யுத்தம் கூட புலம்பெயர் தேசங்களில் வாழும் ஈழ உறவுகளினுடைய டொலரின் பலத்தில்தான் நடைபெற்று பெரும் யுத்த அழிவுகளையும் உயிர்ச்சேதங்களையும் சந்தித்து முள்ளிவாய்க்காலில் மாபெரும் மௌனமாகியது என்றால் டொலரின் தாக்கம் ஈழத் தமிழர்களை புரட்டிப் போட்டது மட்டுமல்லாமல் பௌத்த சிங்கள பேரினவாத அரசு அந்த டொலர்களை கொள்ளையடித்ததன் மூலம் கொழுத்த லாபமும் அடைந்தது எனலாம்.

அந்த டொலருக்காக இன்றளவும் வறுமையில் வாடும் எண்ணற்ற ஈழத் தமிழர்கள் இன்று வரை பேராசை கொள்வது இராமாயணத்தில் சீதை ஆசை கொண்ட மாயமானுக்கு ஒப்பானதாகும். ஆசையால் சீதை மாட்டிக் கொண்டதை போல் எம் ஈழ உறவுகளும் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதே சிந்திக்கத் தெரிந்த ஒவ்வொரு ஈழத் தமிழனுடைய எதிர்கால விருப்பமாகும்.


இந்தத் தாக்கத்திலிருந்து ஈழத் தமிழ் மக்கள் முற்றாக விடுபட வேண்டும் என்றால் அவர்கள் தங்களின் உள்ளூர் உற்பத்திகளை ஓரளவாவது பெருக்கி தங்களுக்குள்ளே பங்கிட்டு தங்கள் நாட்டுக்குள்ளே தன்நிறைவு காண வேண்டும். அதுவே டொலரை கட்டுப்படுத்துவதற்கான மிகச் சிறந்த உபாயமாகும். அத்தியாவசியமான தேவைகளை மட்டும் கருத்தில் கொண்டு மேலதிகமாக பாவிக்கும் எரிபொருள் பாவனையை மட்டுப்படுத்தி நம் பாரம்பரியமான துவிச்சக்கர வண்டிகளை வீதிகளில் இறக்குவோமானால்

டொலரின் தாக்கத்தி லிருந்து விடுபட்டு நம் தாய்நாட்டின் ரூபா யின் ஊடாக நம் அன்றாட வாழ்வை அமை தியாக கொண்டு நகர்த்த முடிந்தால் அதுவே நம் வாழ்வின் ஒரு மகத்தான வெற்றியாக ஓரளவு தன்நிறைவு பெற அது வழிவகுக்கும்.

டொலரின் தாக்கத்திலிருந்து விடுபட்டு நம் தாய்நாட்டின் ரூபாவினூடான நம் அன்றாட வாழ்வை அமைதியாகக் கொண்டு நகர்த்த முடிந்தால் அதுவே நம் வாழ்வின் ஒரு மகத்தான வெற்றியாகும்.

ஒரு தேசத்தின் வளர்ச்சி என்பது டொலரின் வருகையை வைத்து மதிப்பிட முடியாது. ஒரு குண்டூசிக்காகக் கூட வெளிநாடுகளிடம் கையேந்தாமல் இருப்பதே அந்தத் தேசத்தின் உண்மையான வளர்ச்சியாகும்.

**சாம் - ரமேஸ்குமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 ஆண்டுகள் நீடித்த தாய்மை போராட்டம்

தங்கள் உரிமைகள் மறுக்கப்படுவதற்கு எதிராகப் போராடினாலும் சமூகத்தில் நிகழும் மனித உரிமை மீறலுக்கு எதிராகப் போராடினாலும் சரி பெண்களின் போராட்டம் எப்போதும் வீரியமானதாகவே இருக்கிறது. சமையல், குழந்தை வளர்ப்பு ஆகியவற்றைப் பெண்களுக்கு மட்டும் உரியதாக்குவது தவறான போக்காக இருந்தாலும் இன்றைய சூழ்நிலையில் அதுதான் நடைமுறையில் உள்ளது. ஆதலால் தங்கள் குழந்தைகளின் ஆரோக்கியமான எதிர்காலம் கேள்விக்குள் ளாக்கும் போது பெண்கள் வெகுண்டு எழுகின்றனர். லண்டனில் நடந்த தாய்மையின் போராட்டம்தான் இந்த வார போராட்டக்களத்தின் பகிர்வு.

போர்களும் கலவரங்களும் உலகின் இயற்கைச் சூழலை அழிக்க, அவற்றுக்கெதிரான போராட்டங்களும் ஆங்காங்கே வெடித்து வருகின்றன. அந்த வகையில் 1981 ஆம் ஆண்டு லண்டனில் நடந்த கிரீன்ஹாம் காமன் போராட்டம் முக்கியமானது.

லண்டனில் உள்ள ஃபெர்க்சிர் என்னுமிடத்தில் கிரீன்ஹாம் காமன் என்ற இடம் உள்ளது. 1980 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் அணு ஆயுத ஏவுகணைகளை கிரீன் காமில் வைக்கத் திட்டமிட்டனர். இது சுற்றுச்சூழலையும் எதிர்கால தலைமுறையையும் பாதிக்கக்கூடும் என்பதால் இதற்கு எதிரான போராட்டம் வெடித்தது. 36 பெண்கள் 4 ஆண்கள் மற்றும் குழந்தைகள் வேல்ஸ் தலைநகரமான கார்டிஃப்பிலிருந்து கிரீன்ஹாம் வரை ஏவுகணைகளுக்கு எதிரான பதாகைகளைச் சுமந்து கொண்டு நடைப்பயணம் மேற்கொண்டனர். ஆனால் நடைப்பயணம் பெருமளவில் கவனத்தை ஈர்க்காததால், 1981 ஆம் ஆண்டு கிரீன்ஹாமிலேயே தங்கி அமைதி வழியில் போராடத் தொடங்கினர்.

அமைதி வழிப் போராட்டத்தில் இணைய லண்டன் முழுவதும் உள்ள பெண்கள் மற்றும் பல நாடுகளில் உள்ள பெண்கள் போராட்டக்களத்திற்கு வந்து தங்கள் ஆதரவுக் கரங்களை நீட்டத் தொடங்கினர். போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் அங்கேயே சமைத்து, உறங்கினர். அவர்கள் தங்குவதற்கான கூடாரங்களைப் பெண்களே அமைத்துக் கொண்டனர். இதற்கு கிரீன்ஹாம் காமன் பீஸ் கேம்ப் என்று பெயரிடப்பட்டது. சிறு குழுவாகத் தொடங்கிய போராட்டம் ஆயிரக்கணக்கான பெண்கள் இணைய வலிமைபெற்றது.

கடுமையான மழையிலும் வெயிலிலும் போராட்டத்தின் வீரியம் சற்றும் குறையவில்லை. அங்கு மின்சார வசதியில்லை, போதுமான தண்ணீர் வசதி இல்லை. எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் பெண்களின் போராட்டம் வலிமை பெற்றது. 1983 ஆம் ஆண்டு ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் மனிதச் சங்கிலியாக இணைந்து கிரீன் ஹாமில் ஏவுகணை வைப்பதற்கு தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் பூமியில் வாழும் உயிரினங்களுக்கான பெண்கள் (Women for life on earth) என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர்.

இப்போராட்டத்தின் போது பெண்கள் தங்களின் திருமண ஆடைகளை கிரீன்ஹாமில் உள்ள வேலிகளில் தொங்கவிட்டனர். அதேபோல் குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள், துணிகளைக் காய வைத்து தங்களின் தாய்மையை ஆயுதமாக்கிப் போராடினர்.

பல இன்னல்களுக்கு இடையில் நடந்த போராட்டம் வெற்றியும் பெற்றது. 1987 ஆம் ஆண்டு சோவியத் யூனியனும் அமெரிக்காவும் இணைந்து கையெழுத்திட்ட பிறகு அனைத்து அணு ஏவுகணைகளும் கிரீன் ஹாமிலிருந்து எடுக்கப்பட்டன. அந்த காம்பானது மற்ற அணு ஆயுதங்களுக்கு எதிரான போராட்டக் களமாக வருடம் 2000 வரை தொடர்ந்தது. அதற்கு பின்னரே கலைக்கப்பட்டது.






# இயந்திரமயமாக்கலுக்குள் மனித குலத்தின் பயணம்

இயந்திரமயமாக்கல் என்பது உலக வளர்ச்சியின் உச்சம் தொட்டு விட்டது.

இந்த இயந்திரமயமாக்கலுக்குள் மனித இனம் அகப்பட்டதன் விளைவு அதன் சுயத்தை இழந்து இயந்திரம் போல ஓடிக் கொண்டிருக்கிறது என்பதே உண்மையாகிறது.

எந்த இயந்திரமும் இல்லாமல் தொழில்நுட்ப வளர்சியும் இல்லாமல் கலப்பை மாட்டில் ஏரோட்டி விவசாயம் செய்து மாட்டுவண்டியில் போக்குவரத்துச் செய்து தொலைபேசி, கணனி போன்ற கறுமாந்திரங்கள் எதுவும் இல்லாமல் பத்துப் பிள்ளைகள் பெற்று ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள் எம் முன்னோர்கள்.

ஆனால் எல்லாவற்றுக்கும் இயந்திரத்தை நம்பி வாழும் தற்போதைய மனிதனால் எதையும் சரியாய் செய்ய முடியாமல் திகைத்து நிற்பது இயந்திரமயமாக்கலின் சிக்கலான விளைவு எனலாம்.

முன்பெல்லாம் அரிசியை நீரில் ஊற வைத்து அதை வடிகட்டி உரலில் இடித்து அரித்து மாவாக்கி விறகடுப்பில் பிட்டவித்து உண்டு வாழ்ந்தோம்.

நெல்லை உரலில் குத்தி சோறாக்கி உண்டு வாழ்ந்தோம். குரக்கனை ஊற வைத்து மாவடித்து விதவிதமான உணவு செய்து ஆரோக்கியமாக வாழ்ந்தோம்.

காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு இவை அனைத்தும் விறகடுப்பில், வீட்டு மொத்த ஆட்களின் உடு புடவைகள் துவைப்பது இதர வேலைகள் என அனைத்து வேலைகளும் செய்து உறவுகளுடன் கூடி இருந்து அரட்டை அடிக்க, விளையாட நேரம் இருந்தது முன்பு.

இப்போது அனைத்திற்கும் இயந்திரம். சோறு வடிப்பதில் இருந்து உடுப்பு துவைப்பது வரை சுவிச்சை போட்டால் போதும் அடுத்த ஐந்து நிமிடத்தில் அனைத்தும் முடிந்துவிடும்.

ஆனாலும் உறவுகளுடன் கூடி ஓரிரு வார்த்தைகள் பேசக் கூட நேரம் இன்றி இயந்திரங்களாய் அலைந்து கொண்டிருக்கிறோம் நாம் இப்போது.

இது ஏன் என்பதை நாம் இன்னமும் சிந்திக்கத் தவறி, விட்ட தவறுகளையே மீண்டும் மீண்டும் விட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அன்றைய காலத்தில் எம் முன்னோர்களிடம் பணத் திற்கோ, சொத்திற்கோ, பதவிக்கோ ஆசை இல்லை.

உழைப்பு அது நாம் தற்சார்புடன் வாழ போதுமாய் இருந்தால் போதும் என்ற நிறைவான மனநிலை.

இன்றைய நாம் எப்படி வாழ்கிறோம்? பண மோகம் கொண்டு இயந்திரத்திலும் வேகமாகிறோம்.

சொத்தாசை கொண்டு எம்மையே வருத்தி வாழ்கிறோம். பதவியாசை எம்மை ஓடாய்த் தேய்த்து விடுகிறது.

இதன் விளைவு நாம் எம் வாழ்க்கை முறையை மாற்றி புதிய இயந்திர வாழ்க்கைக்குள் இன்னும் இன்னும் நுழைகின்றோம்.

இது எம்மை நிரந்தர நோயாளியாக்கி விட நாற்பது வயதிலேயே சீனி வருத்தம், இதய வருத்தம், கொழுப்பு வருத்தம் என அத்தனைக்கும் கொப்பி போட்டு கிளினிக் வரிசையில் காத்துக் கிடக்கிறோம்.


இயந்திரமயமாக்கல் என்பது நல்லது தான். ஆனால் அது மனிதனை நோயாளியாக்க வல்லதாய் இருக்கக் கூடாது. அவ்வாறு இருக்குமாயின் அது ஒருநாளும் அபிவிருத்தியின் முன்னேற்றமாய் இருக்காது.

**மாவை.நா.கஜேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வுரிமை

மானிடக் கலைகளால்
மரபுகளறிந்தோம்!
மானிடக்காயங்கள் மறந்து
மனிதமும் தேய்கின்றது
காணாமல் போகின்றது யாவுமே
மண்ணைத் தோண்டி
மரபுகள் தேடுவோரே
மனதைத் தோண்டி
இன மதம் மறந்து
புனிதம் புதைக்காதீர்கள்
நிழலுக்கு வர்ணமில்லை
வாய்மைக்கு வாய்ப்பூட்டு
வேண்டாம்..
வாழ்வுரிமையே
வளமான வாழ்வு!



தமிழினியன்,
பரந்தாமன்.

## பெண்ணினமே எழு!



ஊர்க்கதைகள் கதைப்பதற்கா
உலகிலே நீ அவதரித்தாய்?
வீணான பேச்சைா நீ
விந்தை என நினைக்கிறாய் ?
சண்டைகளை மூட்டி நீ
எப்படி சரித்திரத்தில் இடம்பிடிப்பாய்?
இப்படி வாழும் நீ
எவ்வாறு எதிர்கால சந்ததியை உருவாக்குவாய்
சண்டைகள் பிடிக்கவும்
வீண்பேச்சு பேசவும் தான்
இந்தப் பெண்கள் லாயக்கு என்ற
ஆண்களின் நையாண்டிப் பேச்சுக்கு
பதிலடி கொடுப்பதற்காய்
எப்போது நீ துணியப் போகிறாய்?

இ.இளமதி,
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.


## இலட்சியமே வாழ்வின் உதவிக் கரம்

மனிதா ! நீ தெருவில் உறங்குகிறாய்
என்றாலும் பரவாயில்லை-உன்
கனவுகள் எப்போதும் சிகரங்களின் மேல் இருக்கட்டும்

உயர்ந்த இலட்சியங்கள்கொண்டவனே
உயரம் தொடுகிறான்-உயர் எண்ணம் கொண்டவனே
உலகை ஆள்ந்து வெற்றி கொள்வான்

உன் இலட்சியம் எப்போதும் நட்சத்திரங்களைப் போல்
உயரத்தில் இருக்கட்டும் -அதன் சுடர்கள் போல்
ஒளி வீசி ஒளிச்சிரிப்பில் வாழட்டும்

ஏ மனிதா இதை கவனம் கொள்-ஓர் படகு
இலக்கின்றி எக்கரையும் சேராது-அதே போல்
இலட்சியம் இல்லாத மனிதர்கள் வாழ்வில் எவ் வெற்றிகளையும்
சேராது என்பதே உண்மை



ம.அலெக்சனா
தொல்புரம் கிழக்கு

## மௌனத்தின் தேடல்- 682




## இறகிறந்தது

புளுதி கிளப்பிய ஆடுகளத்தில்
தொண்டை கொக்கரிப்புடன்
கொண்டை சிவந்த கோவக்காரர்கள்
பண்டைய கால சண்டை என்றாலும்
தண்டனை இல்லாத குற்றவாளிகள்
இழந்தது என்னமோ இறகு தான்

லோ. கம்சனா,
யாழ்ப்பாணம்.

## மௌனத்தின் தேடல்- 683



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## பகடைக்காய்

அப்பாவிப் பறவைதனை பகடைக்
காயாக்கி பகட்டுக்காய்
பந்தயம் கட்டி பாசாங்காய் பாசம்
போல் வேடமிட்டு போசாக்கு உணவு
மருந்து
மாத்திரை என பக்குவமாய்
ஊட்டி விட்டு சண்டைப் பயிற்சி
கொடுத்து அடிபட விடுதல்
ஓர் மனிதாபிமானம் இல்லா
செயற்பாடே

சி.மகாலட்சுமி,
கொக்குவில்.

## பே(ா)ட்டி

சிறகை அகல விரித்து பாய்ந்து பாய்ந்து
தந்திரங்கள் புரியாமல்அந்தரத்தில் போரர்
விருதுகள் பரிசுகள் பெறஉயிரினங்களை மோதவிட்டு
முடமாக்கும் செய்கையொன்றும்குற்றங்களில் கொடுமையானது

க.நாகராசா, நுணாவில்

## சண்டை

பட்சி இரண்டு
சண்டை போடுது
பயன் உண்டோ?
அழிவு நிச்சயம்
சமாதானமே மேல்

க.திருமகள்,
பண்டத்தரிப்பு.

## ஆண்அழகர்

மானில் கலை அழகு
மாட்டில் எருது அழகு
யானையில் களிறு அழகு
கோழியில் சேவல் அழகு
மயிலில் ஆண் அழகு
மனிதனில் பெண் அழகா?

பி.மதுஷ்சன், தையிட்டி.

## கொடிய குணம்

மானிட நேயம் உள்ளோராய்
வாழ வேண்டிய மனிதர் நாம்
கொடுமை செய் குணமும்
கொலைவெறி எண்ணமும்
ஏற்றுக்கொண்ட எமக்கு
பிறரென்ன பிற உயிர்கள்
கோரமாய் சண்டையிடுவதை
தடுக்கவா மனம் வரும்?
இரசித்து மகிழ்வோமையா!

சி.இ. அன்புதுரை,
சம்மட்டியோலை
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 73

# கடல்புறா

## நீர் மோகினி

நீண்டநேரம் அப்படி நீந்தி விளையாடியதால் உடலின் உஷ்ணம் மட்டுமின்றி...

சிந்தனைச் சூடும் பெரிதும் குளிர்ந்ததால் ஓரளவு சதுஷ்டியுடன் அலைகளில் வந்து சர் சர் என்று மோதிய கடல் முகப்பின் தரையில் தனது இரு கால்களையும் நீட்டி உட்கார்ந்து கொண்டு கடலின் இணையற்ற லாவண்யத்தை ஆசையுடன் கண்களால் பருகினான். அவன் கால்களை அவை நீர் திரும்பத் திரும்பத் தடவிச் சென்றதே பெரும் இன்பமாயிருந்தது இளையபல்லவனுக்கு. அத்துடன் கண்களுக்கும் கிடைத்தது பெருவிருந்து.

வடமேற்கு நோக்கித் தலையை நீட்டிக் கொண்டிருந்த அக்ஷயமுனையின் கடலில் கிழக்கிலிருந்து குறுக்கே பாய்ந்த கதிரவன் ஒளி நீரின் நீல நிறத்திற்கு அதிக நீலத்தையும் எழுந்து மடிந்த அலைகளின் வெண்மைத் திரைகளுக்கு அதிக வெண்மையையும் அளித்ததால், நீலக்கல் ஆபரணத்துக்கு இடையே வைரங்களின் வரிசையைப் பதித்த தோற்றத்தை அளித்தது. மெல்லக் காற்றிலாடிய தனது மரக்கலமும் அதைச் சுற்றிலும் போர்க்கலங்களுடன் அசைந்து கொண்டிருந்த கொள்ளையரின் மரக்கலங்களும் எதிரேயிருந்த கோட்டையைத் தாக்கத் தயார் செய்து கொள்ளும் படையணியைப் போல் காட்சியளித்தன. அலைகள் மீது உலாவிய கடல் நாரைகளைத் தவிர தரையிலிருந்து நீர் முனைக்கு நகர்ந்து மீன்களையும் நண்டுகளையும் பிடிக்க முயன்று கொண்டிருந்த பெரும் கொக்குகளும் அந்தக் கடற்கரைக்குக் கண் கவரும் அழகைக் கொடுத்துக் கொண்டிருந்தன. அந்தப் பெரும் வெண் கொக்குகளிலொன்று நண்டொன்றைத் தன் அலகில் கொத்திக் கொண்டு ஓட ஆரம்பிக்க, அதைக் கண்களால் தொடர்ந்த இளையபல்லவன் அந்தக் கடற்கரையில் வேறு கவர்ச்சியும் இருப்பதைத் திடீரென்று உணர்ந்தான். உணர்ந்ததால் திகைத்தான். திரும்பிப் படகில் ஏறி மரக்கலத்துக்குப் போய்விடலாமா என்று கூட நினைத்தான். மனம்தான் அதற்கு இடங்கொடுக்கவில்லை.

கொக்கு சென்ற திசையில் தானிருந்த இடத்துக்குத் வெகுதூரம் தள்ளி மஞ்சளழகி அலைகளில் துளைந்து விளையாடுவதைக் கண்டான் இளையபல்லவன்.

கண்ட கண்கள் கண்டதைக் கண்டுகொண்டே இருந்தன. மருண்ட மனம் உருண்டெழுந்து உணர்ச்சி அலைகளைப் பாய்ச்சின. சிந்தனையில் எழுந்தன அந்தச் சித்தினியைப் பற்றி எத்தனையோ கற்பனைக் குவியல்கள், அலைகளைப் பற்றிய பொறாமையும் அவன் இதயத்தில் ஓரளவு எழுந்தது. அவள் கை மாற்றிப் போட்டபோது படகுத் துடுப்புகள் போல் துழாவிய அந்த வெண்மைக் கரங்களின் அழகைக் கண்டு பிரமித்தான் அவன்,

"அவள் நீந்தல் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த இளையபல்லவன் ஓரளவு தைரியத்துடன் தான் அதைப் பார்த்தான். ஆனால் அவள் கரைமீது ஏறி வந்ததும் அந்தத் தைரியமெல்லாம் எங்கோ பறந்தது. அவள் கரைமீது வந்ததும் அந்தப் பகுதியில் யாருமில்லையென்ற நினைப்பால் மேலாடையைக் களைந்து தலையைத் துவட்டிக் கொள்வாளோ எனப் பயந்தான் அவன் ஒரு விநாடி, அந்தப் பயத்துக்கு இடமில்லாமல் அவள் செய்து விட்டாலும் வேறு பயத்துக்கு இடம் வைத்தாள், கரையேறியதும் கீழே தார்ப்பாய்ச்சாகக் கட்டியிருந்த சிற்றாடையை லேசாகப் பிழிந்துவிட்டு மேலாடையைப் பிழியாமலே சில விநாடிகள் நின்று கடற்புறத்தை ரசித்தாள்.

பிறகு ஏதோ நினைத்துத் தலையை ஆட்டி விட்டுத் தானாகச் சிரித்துக் கொண்டு கடல்நீர் தரையில் முட்டிக் கொண்டிருந்த இடத்தின் ஓரமே தரையைப் பார்த்துக் கொண்டு நடந்தாள். அவள் தான் இருப்பதை அறியாமல் தன்னை நோக்கி வருவதைக் கண்ட இளையபல்லவன், தான் எப்படி நடத்து கொள்ள வேண்டும் என்பதை உணரும் சக்தியை அறவே இழந்தான்.

(தொடரும்...)

---


# நான் வைரமுத்து பேசுகிறேன்... 19

## வெளியூர்ப் பூக்கள்

புலவர்கள் எல்லோரும் ராஜசபைகளுக்குப் போய் விட்டதால், தங்களைப் பாடுவதற்கு ஆளில்லாத உழைக்கும் மக்கள் தங்களைத் தாங்களே பாடிக் கொண்டார்கள். அவைதாம் நாட்டுப் பாடல்கள்.

ஒதுக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல, ஒதுக்கப்பட்டவர்களின் இலக்கியங்களும் கௌரவம் பெற வேண்டிய காலமிது.

என்னைப் பொறுத்தவரையில் ஒரு பேனாவின் நுனியில் மாட்டப்பட்டிருக்கும் முள்ளை



விடவும் ஒரு கலப்பையின் முனையில் மாட்டப்பட்டிருக்கும் கொழுவே உயர்ந்ததென்று கூறுவேன்.

### வெளியூர்ப் பூக்கள்

ஒவ்வொரு மொழிக்கும் அது பேசப்படும் இடத்தை சார்ந்த கலாசார வாசனை உண்டு.

அந்த வாசனை அந்தந்த மொழிகளின் இலக்கியங்கள் மீது அடிக்கும்.

அந்த வாசனைதான் அந்தந்த இலக்கியத்தின் தனித்துவம். அந்தத் தனித்துவம்தான் ஓர் எஸ்கிமோவின் கவிதையை சில்லென்று வைத்திருக்கிறது.

ஓர் அரேபியக் கதையைச் சூடேற்றுகிறது.

எனவேதான் ஒரு வாசகன் எஸ்கிமோவின் ஸ்லெட்ஜ் வண்டியிலும் பாலைவனத்தானின் ஒட்டகத்திலும் பயணம் செய்து பார்க்க முடிகிறது.

அந்த மாதிரி இலக்கியங்களைப் பயிலும் போதெல்லாம் மனசு அந்தந்த தேசத்துக் காற்றையும் அந்தந்த தேசத்து மண்ணையும் மோப்பம் பிடித்துக் கொள்கிறது.

தன் பெயர் தெரியாமல் அப்படி ஒருவன் கரைந்து காணாமல் போகும் நிமிடங்களில் படிப்பவனுக்குள் படைத்தவன் நிறம் புரியா ரத்தத்தைப் பாய்ச்சுகிறான். .

பைபிளின் உன்னதப் பாட்டு அப்படி என்னைத் திசை தெரியாமல் திக்குமுக்காட வைத்திருக்கிறது.

பைபிளை மொழி பெயர்த்தவர்கள் கூட பாதிக் கவிஞர்களாகவே இருந்திருக்கிறார்கள்.

அதில் கூந்தலுக்குச் சொல்லப்பட்ட உவமையைப் படித்தபோது, மலைச்சரிவிலிருந்து உருட்டப்பட்டுப் பூக்களின் பள்ளத்தாக்கில் விழுந்தது போல ஒரு புதிய அனுபவத்தில் புளகித்தேன்.

**"கிலியாத் சரிவிலே**
**இறங்கி வருகின்ற**
**வெள்ளாட்டு மந்தை போல்**
**தோன்றும்**
**நின் கூந்தல்"**

அடடே! அந்த அனுபவத்தை முற்றும் உணர்வதற்காகவேனும் நான் ஆடு மேய்ப்பவனாக ஆக வேண்டும்.

பாரசீகப் பண்பாட்டில் கண்ணாடிக் கோப்பைகள் உரசும் சப்தங்களும் கிண்ணாங்களில் திராட்சை மது குமிழியிடும் ஓசைகளும் கேட்டுக் கொண்டே இருக்கும்.

மீன்களுக்குத் தண்ணீர் மாதிரி அவர்களுக்குத் திராட்சை மது தேவைப்பட்டிருக்கிறது.

உமர்கயாமின் போதை கலந்த கிண்டலை நினைக்கும் போதெல்லாம் நெடியடிக்கிறது.

**"குடிப்பவனுக்கெல்லாம்**
**சொர்க்கமில்லை என்றால்**
**அது என் உள்ளங்கையைப்**
**போலவே**
**காலியாயிருந்திருக்கும்!"**

அபாரம்!

சொர்க்கத்தின் மீதே ஒரு வெடிகுண்டை வீசிவிட்டுப் போய் விட்டானே! தந்தை மரணமடைந்த துக்கத்தை விசாரிக்க வந்த வெளிநாட்டுப் பிரபுக்கள் தாயின் மறுமண விழாவில் கலந்து கொள்கிறார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

361

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## இரைப்பை அழற்சி (Gastritis) என்பது என்ன?

இரைப்பையில் அமிலத்தின் சுரப்பு கூடுவதாலோ அல்லது இரைப்பை மேலணிக்கலங்கள் வேறு காரணங்களால் பாதிக்கப்படுவதாலோ இது ஏற்படுகிறது.

### இரைப்பை அழற்சி (Gastritis) வந்ததற்கான அறிகுறிகள் என்ன?

- வயிறு எரிவு
- நெஞ்சு எரிதல்
- அடிக்கடி ஏவறை ஏற்படல்
- சாப்பிட்டபின் வயிறு வீங்குதல்
- வயிறு குமட்டல், வாந்தி உருவாதல்
- சமிபாடடையாத்தன்மை உருவாதல்
- சில வேளைகளில் இரத்த வாந்தி எடுத்தல், மலம் கறுப்பாக போதல்

### இது உருவாகக் காரணங்கள் என்ன?

- சரியான நேரத்துக்கு உணவு எடுக்காமல் விடல்.
- சில மருந்துகள்- அஸ்பிரின், அலன்றோனட்.
- மனஅழுத்தம்.
- மதுபானம் அருந்தல்.
- சிகரட் குடித்தல்.
- அதிக உடல் நிறை.
- சில வேளைகளில் புற்றுநோய்களும் இவ் அறிகுறியைக் கொண்டிருக்கும்.

### நான் இதை குறைக்க என்ன செய்ய வேண்டும்?

- சரியான நேரத்துக்கு உணவு உண்ண வேண்டும்.
- கொழுப்புணவுகளை குறைவாக உள்ளெடுக்க வேண்டும்.
- அதிகம் உறைப்பான, அதிக அமிலத்தன்மையுள்ள உணவுகளை குறைவாக உண்ண வேண்டும்.
- மதுபானம், சிகரட் பாவனையை நிறுத்த வேண்டும்.
- சோடா போன்ற காப்நேற்றிய பதார்த்தங்களை குறைக்க வேண்டும்.
- அஸ்பிரின் போன்ற மாத்திரைகளை பாவிப்பதை நிறுத்த வேண்டும்.
- உடல் நிறையைக் குறைக்க வேண்டும்.

### இதற்கு மருந்து எடுக்காவிடில் வேறு பிரச்சினைகள் ஏதும் ஏற்படுமா?

- இதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக குருதி வெளியேறுமாயின் குருதிச் சோகை நோய் ஏற்படும்.
- சடுதியாகவும் அதிக குருதி வெளியேறலாம்.
- பிற்காலத்தில் புற்றுநோயாகவும் மாறலாம்.
- இரைப்பையில் அடைப்புக்களை ஏற்படுத்தலாம். இதனால் தொடர்ச்சியாக வாந்தி ஏற்படும்.

### இதற்கு மருந்துகள் உண்டா?

ஆம். உங்களுக்கு பொருத்தமான மருந்துகளை வைத்தியர் வழங்குவார். அவர் கூறியவாறு மருந்தை தொடர்ந்து எடுக்க வேண்டும்.

### இவ்வருத்தத்திற்கு கமரா விட்டு பார்க்கிறார்களே ஏன்?

- இரைப்பை அழற்சிதான் என்பதை உறுதி செய்வதற்கு.
- 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரைப்பை புற்றுநோய் இல்லை என்பதை உறுதி செய்துகொள்வதற்கு.
- தேவையேற்படின் மாதிரிப் பொருளை எடுத்துப் பரிசோதிப்பதற்கு.

### உங்களுக்கு Endoscopy செய்யவேண்டுமென வைத்தியர் கூறினாரா? Endoscopy என்றால் என்ன?

இது மெல்லிய குழாய் வடிவான கமரா மூலம் உங்கள் சமிபாட்டுத் தொகுதியின் அங்கங்களான களம், இரைப்பை, முன்சிறுகுடலின் பாகம் என்பவற்றைச் சோதிப்பதாகும்.

### இது யாருக்கு செய்யப்பட வேண்டும்?

- குருதிச்சோகை நோய் உள்ளவர்களுக்கு மருந்து கொடுப்பதன் மூலம் குருதியினளவு கூடாவிடின்.
- வயிற்றுப் பொருமல், வயிற்று நோ, சமியாத்தன்மை உள்ளவர்களுக்கு மருந்து மூலம் குறையாவிடின்
- உணவு விழுங்குவதில் சிரமம் உள்ளவர்கள்

### இது செய்வதற்கு நான் எவ்வாறு வைத்தியசாலைக்கு வர வேண்டும்?

- இதற்கு அதேநாளிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்படலாம்.
- முதல் ஆறு மணித்தியாலங்களுக்கு உணவு உள்ளெடுக்கக் கூடாது.
- முதல் இரண்டு மணித்தியாலங்களுக்கு நீராகாரம் உள்ளெடுக்கக் கூடாது.
- வெண்ணிற ஆடையும் கொண்டு வருவது நன்று.

### இது செய்யும் படிமுறைகள் என்ன?

- நீங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் வைத்தியர் உங்களை பரிசோதிப்பார். செய்வதில் ஏதும் பிரச்சினைகள் உண்டோ என்பதையும் ஆராய்வர்.
- பின் இது செய்யும் முறை, செய்வதற்கான காரணம், செய்வதிலுள்ள அனுகூலம், பிரதிகூலம் என்பவற்றை விளங்கப்படுத்துவார்.
- பின்னர் இப்பரிசோதனை செய்வதற்கான எழுத்து மூல அனுமதி பெறப்படும்.
- வெண்ணிற ஆடை மாற்றப்படும். மருந்து ஏற்றுவதற்கான ஊசி போடப்படும்.
- குழாய்ப் பரிசோதனை செய்யும் அறைக்கு அழைத்து செல்லப்படுவீர்கள்.
- அங்கு வைத்தியர் உங்களை வலப்புறமாக படுக்க சொல்வார்.
- உங்கள் உடல் நிலையை கண்காணிக்க தேவையான உபகரணங்கள் இணைக்கப்படும்.
- பின்னர் வாயில் விறைப்புத்தன்மையை ஏற்படுத்தி ஓங்காளத் தன்மையை குறைக்க மருந்து விசிறப்படும்.
- வாயினூடாக செலுத்தப்படும் கமராவை நீங்கள் கடிக்காமலிருக்க உபகரணம் பொருத்தப்படும். பின் அதனூடே மெல்லியகுழாய் வடிவக் கமரா செலுத்தப்படும்.
- வைத்தியர் கூறும்போது நீங்கள் விழுங்கி கொடுக்க வேண்டும்.
- குழாய் வயிற்றினுள் இருக்கும் போது வயிற்றில் பொருமல் தன்மை ஏற்படும். நோ ஏற்படும். குழாயை எடுத்ததும் இது குறைந்து விடும்.

### இது செய்வதால் ஏதும் பிரச்சினைகள் ஏற்படுமா?

- பொதுவாக பிரச்சினைகள் ஏற்படுவதில்லை.
- இருதய வருத்தம் உள்ளவர்களுக்கு சிலவேளைகளில், இதயதொழிற்பாட்டில் சடுதியான மாற்றங்கள் ஏற்படலாம்.
- ஓங்காளிப்பு, வாந்தி போன்றன ஏற்படலாம்.
- சில வேளைகளில் குடலில் இரத்தப் பெருக்கு ஏற்படலாம். (பொதுவாக பரிசோதனைக்காக குடல் மாதிரி எடுக்கப்படும் போது).

### குழாய் விட்டுப் பார்த்த பின் நான், நீர் / உணவு அருந்தலாமா?

- இரண்டு மணித்தியாலங்களுக்கு எதுவும் உள்ளெடுக்கக் கூடாது.
- வாயில் விறைப்புதன்மை குறையும் வரை சூடான மற்றும் காரமான உணவுகளைப் பாவிக்கக்கூடாது.

Dr.கே.சிவசுகந்தன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரப் பகிர்வைக் கொண்ட பெரமுனவினருக்கு 13 ஐ எதிர்க்க அதிகாரம் இல்லை

### நிமல்லன்சா எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

"அதிகாரப் பகிர்வு தொடர்பில் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி நாட்டிலுள்ள அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கும்போது அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு தார்மீக உரிமை இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் நிமல்லன்சா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, 13 ஆவது திருத்தம் தற்போதும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதன் கீழ் அனைத்து அரசியல் கட்சிகளினதும் கருத்துகளைப் பெற்று நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

அந்த வகையில் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு அதிகாரப் பகிர்வை வழங்குவதன் மூலம் சர்வதேச நம்பிக்கையையும் கட்டியெழுப்ப முடியும்.

இது தொடர்பான புரிதல் சிறிதளவும் இன்றி, பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாட்டுக்கும் மனசாட்சிக்கும் அமைய செயற்படும் பொதுஜன பெரமுனவின் ஏனைய உறுப்பினர்களது நிலைப்பாட்டுக்கும் முரணான கருத்தை பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எந்த அடிப்படையில் தெரிவிக்கின்றார் என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமின்மை மற்றும் நெருக்கடிகளை தீர்த்து நாட்டில் ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்பக்கூடிய ஒரே தலைமைத்துவமாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு காணப்பட்ட ஒரேயொரு தெரிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே.

இவ்வாறான நிலையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்து சர்வதேசத்தின் ஆதரவுடன் நாட்டைக் கட்டியெழுப்பி பொருளாதார, சமூக, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திய தற்போதைய ஜனாதிபதி மீது நாட்டு மக்கள் மத்தியில் நம்பிக்கைக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. எனவே மக்கள் ஆணையற்ற சிலரின் கருத்துக்களை மக்கள் நிச்சயம் நிராகரிப்பார்கள் எனத் தெரிவித்துள்ளார். (நி-5)

## குருந்தூர் மலை விவகாரம் தீர்வின்றேல் வன்முறை வெடிக்கும்

### பொதுஜன பெரமுன எச்சரிக்கை

(கொழும்பு)

குருந்தூர்மலை விவகாரத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைந்து தீர்வு காண வேண்டும். இல்லையேல் அங்கு பௌத்தர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் வன்முறைதான் வெடிக்கும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் மேற்படி விடயத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், குருந்தூர்மலை விகாரைக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது. அங்கு தமிழர்கள் புகுந்து சண்டித்தனம் காட்டுவதை ஏற்க முடி யாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பௌத்த மதத் தைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளுக்கு அமைய அவர் செயற்பட வேண்டும். தமிழ் அரசியல்வாதிகளின் சுயலாப அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஜனாதிபதி முக்கிய வத்துவம் வழங்கக் கூடாது.

தமிழ் மக்களை உசுப்பேத்திக் குருந்தூர்மலைக்கு அழைத்து வந்து தங்கள் அரசியல் நாடகத்தைத் தமிழ் அரசியல் வாதிகள் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். குருந்தூர்மலை விவகாரத்தை உங்கள் சுயலாப அரசியலுக்காகப் பயன்படுத்த வேண்டாம் என்று தமிழ் அரசியல்வாதிகளிடம் விநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி)


### திருமண முகூர்த்த நாட்களுக்கான பதிவு

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபத்தில் ASR Hall 21.08.2023, 23.08.2023, 04.09.2023, 11.09.2023, 17.09.2023, 25.10.2023, 27.10.2023, 03.11.2023 ஆம் திகதிகளில் உங்கள் பிள்ளைகளிற்கு திருமணம், பூப்புனித நீராட்டு விழாக்கள், கிறிஸ்தவ பதிவு திருமணங்கள் செய்ய விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவு செய்ய விரும்புவோர் நேரடியாக வரவும். மண்டபத்தை 9 மணிமுதல் 5 மணிவரை திங்கள் முதல் வெள்ளிவரை பார்வையிடலாம்.

**அண்ணாமலையான்**
**ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார**
**திருமண மண்டபம்.**
**இல.542,கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி எண்:**
**021 222 1355**
**021 222 1356**


16765


## சைவத் தமிழர்களின் தலையாய திருக்கோயில் நல்லூர்

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழா நாளை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து இருபத்தைந்து நாட்களும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நல்லூரை நோக்கி வருவார்கள். சைவத் தமிழர்களின் பண்பாட்டுக் காவலரணாக விளங்குவது நல்லூர்க் கந்தசுவாமி கோவில். இவ்வாலயத் திருவிழாக்காலம் என்பது சைவசமயத்தின் எழுச்சிக்காலம் எனலாம். யாழ்ப்பாணம் முழுவதும் இக்காலப்பகுதியில் விரதம் அனுட்டிப்பது வழக்கம். அதனால் வீடுகளைக் கழுவி தங்கள் திருவிழாக் காலத் தவப்பொழுதுக்கு சகலரும் ஆயத்தமாகி விடுவார்கள்.

நல்லூர் சுற்றாடல் முழுவதும் தண்ணீர் பந்தல்கள், தெருவை மூடி அமைத்து தெய்வீகப் பொலிவை உருவாக்கி விடுவார்கள். தேசம் கடந்து வாழும் ஈழத்தமிழர்கள் இங்கு ஒன்று கூடும் இடமாக நல்லூர் விளங்குகிறது. புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழும் பக்தர்கள் தமது உழைப்பில் ஒரு பகுதியை சேர்த்து வைத்து நல்லூர் திருவிழாக் காலத்தில் தாய்நாடு வந்து போவதில் ஆறுதலடைகிறார்கள்.

தமிழ் வேந்தர்கள் காலத்தில் பெருங்கோவிலாக விளங்கிய நல்லூர், போர்த்துக்கேயர் வருகையினால் முற்றாக அழிக்கப்பட்டது. ஒல்லாந்தர் காலத்துப் பகுதியில் ஸ்ரீமான் மாப்பாண முதலியார் எடுத்த முயற்சியின் பயனாக இன்றைய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலினை சைவ உலகம் காணும் வாய்ப்பு பெற்றது. ஸ்ரீமான் மாப்பாண முதலியார் பரம்பரையினர்க்கு சைவத்தமிழ் உலகம் என்றும்



நன்றிக் கடன்பட்டுள்ளது. அப்பரம்பரையில் உதித்த குகஸ்ரீ சயன் குமாரதாச மாப்பாண முதலியார் இன்று தனது தந்தையின் வழியில் கோவிலை நேர்த்தியாக பாரமரித்து வருகிறார். ஆண்டு தோறும் அலங்காரக் கந்தனுக்கு அற்புதத் திருப்பணி நடைபெறுகிறது. இந்த ஆண்டு புதிய சப்பரம் உருவாக்கப்பட்டுள்ளது. நல்லூரான் சப்பறத்தின் போது ஒரு பெரும் கோபுரம் எழுந்து வலம் வருவது போல் பார்ப்பவர்கள் அனைவரையும் திகைப்பூட்டும் காட்சியை வேறெங்கும் காண முடியாது.

இந்த ஆண்டு புதிய சப்பறத்தை காண்பதற்காக அடியவர்கள் காத்து இருக்கிறார்கள். ஆறுமுகப்பெருமானின் திருத்தேர் இருப்பிடம் இவ்வாண்டு திருத்தி அமைக்கப்பட்டு இருக்கிறது. திருத்தேரில் ஏறும் மண்டபம் புதுப்பொலிவு பெற்றிருக்கிறது. என்ன அதிசயம் என நல்லூர்க் காட்சி அனைவருக்கும் திகைப்பூட்டும்.

நல்லூர்த் திருவிழாக் காலத்தில் ஆடம்பரத்துக்கு இடமில்லை. ஏழை, செல்வந்தர் என்ற வேறுபாடு இல்லை, பக்தர்கள் அனைவரும் மீளா அடிமையாக ஒன்று கூடுவர். அடியார்கள் தோளில் முருகன் வரும் போது அலை கடலில் மிதப்பது போல் ஆனந்தமாய் இருக்கும். சின்னஞ்சிறிய வேலுக்குரிய சக்தியை நல்லூர்க் கந்தன் வெளிப்படுத்துவான்.

அலங்காரக் கந்தனின் அழகு கண்டு ஆனந்தங் கொள்ளுவர். வள்ளியும் தெய்வானையும் வர்ண அழகில் வருவர். தங்க முடிகள் சூரிய வெளிச்சத்தில் கண்ணைப் பறிக்கும். எந்த வர்ணனையாலும் நல்லூரான் அழகை வர்ணித்து முடிக்க முடியாது.

அன்பர்களே நல்லூர்த் திருவிழாவிற்கு வருகை தரும் போது சைவத் தமிழ்ப் பண்பாட்டு உடைகளோடு வாருங்கள். சின்னஞ்சிறுவர்களுக்கும் பண்பாட்டு உடைகளையே பயன்படுத்துங்கள். எமது பாரம்பரியங்களை நாம் பாதுகாக்கத் தவறினால் எமது வாழ்க்கை அர்த்தமாற்றதாகிவிடும். குடும்பம் குடும்பமாக கோவிலுக்கு வாருக்கள். ஆபரணங்களைக் குறையுங்கள். எளிமையாக வழிபாடு செய்யுங்கள். வீதிகளில் கூடி வீண்வார்த்தை பேசாதீர்கள். நல்லவண்ணம் வாழ்வதற்கு நல்லூரைப் பயன்படுத்துங்கள். பலரது வாழ்க்கையை பண்படுத்துவது நல்லூர் திருவிழாக்காலம். பலர் திருந்தி வாழ்வதற்கு வழிகாட்டும்.

**"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்"**

-கந்தபுராணம்.

என்ற கூற்றுக்கமைய வேலனுக்கு முன்னால் எவர் வந்தாலும் அவர்களுக்க விடிவு கிட்டும். திருவிழாக் காலங்களில் அமைதி பேணுங்கள. அகந்தையை விடுத்து ஆறுதலைப் பெறுங்கள். ஆடவரின் தோள் வலிமையையும் நங்கையர்களின் பக்தி வலிமையையும் மூத்தோரின் வழிபாட்டு மகிமையையும் கண்ணாரக் கண்டு ஆனந்தம் கொள்ளுங்கள்.

சோம்பலைத் தவிர்த்து அதிகாலையிலேயே அன்னையர்களே அடியெடுத்துக் கும்பிடுங்கள். புதிய ஆரோக்கியம் பிறக்கும். இளைஞர்களே வீதியில் இறங்கி வேலவனை நோக்கி அங்கப்பிரதிஷ்டை செய்து வணங்குங்கள். நல்லூரான் திருவீதி நாம் நன்றே வாழ விதி சமைக்கும்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2023 - 17.09.2023

## ஆரோக்கியத் தொல்லைகள் அகலும்!



**எல்லாம் அறிந்தும் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாத மிதுன இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் சகாய ஸ்தானத்தில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். எனவே ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது. திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்ய இயலாது. மாதத் தொடக்கத்தில் "புத சுக்கிர யோகம்", "புத ஆதித்ய யோகம்", "குருமங்கல யோகம்" ஆகியவை செயற்பட்டாலும், அவை திருப்தியான பலனைக் கொடுக்காது. எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

### கடக - சுக்கிரன்

ஆவணி 1 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் வக்கிரமாகி செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் வக்கிரமாக சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்படலாம். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது.

பூர்வீக சொத்து சம்பந்தமாக நடைபெறும் பஞ்சாயத்துகள் இழுபறி நிலையிலேயே இருக்கும். பிள்ளைகளின் கல்யாணம் சம்பந்தமாக செய்த முயற்சியில், நல்ல வரன்கள் பலவும் கைநழுவிச் செல்லலாம். மனப் போராட்டமும், பணப்போராட்டமும் அதிகரிக்கும் நேரம் இது.

### கன்னி - செவ்வாய்

ஆவணி 2 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், இடம், பூமி விற்பனையும், அதன் மூலம் இலாபமும் கிடைக்கும். கடன் சுமை குறைய வழிபிறக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். உற்சாகத்துடன் செயற்பட்டு, உன்னத வாழ்வமைய வழி அமைத்துக் கொள்வீர்கள். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களின் ஒத்துழைப்பு திருப்தி தரும்.

### மகர - சனி

சனி பகவான் ஆவணி 7 ஆம் திகதி, மகர இராசிக்கு வக்கிர இயக்கத்தில் செல்கிறார். அங்கு சுமார் 4 மாத காலம் சஞ்சரித்த பின்னர், மீண்டும் கும்ப இராசிக்கு செல்லப் போகிறார். வாக்கிய கணித ரீதியாக வரும் இந்த மாற்றம் உங்கள் வாழ்க்கையில் மீண்டும் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தை உருவாக்குகிறது. விலகிய சனி மீண்டும் வருவதால் வியாபாரத்தில் போட்டிகள்




அதிகரிக்கும். வேலை ஆட்களால் பிரச்சினைகள் உருவாகும். வாழ்க்கைத் துணையாலும், வாரிசுகளாலும் மனக்கவலை ஏற்படும். தேக்க நிலை உருவாகி பல பணிகள் செய்ய இயலாமல் போகலாம். பொது வாழ்வில் உள்ளவர்களால் வீண் பழிகள் ஏற்படலாம். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்களிடம் கூடுதல் பொறுப்பை ஒப்படைத்து மனக்கலக்கம் அடையச் செய்வர். இக்காலத்தில் முறையான வழிபாடுகள் முன்னேற்றம் தரும்.

### புதன் வக்கிர நிவர்த்தி

சிம்மத்தில் சஞ்சரித்து வரும் புதன், ஆவணி 15 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிநாதன் வக்ர நிவர்த்தியாவது யோகம்தான். உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். சவாலான பணிகளைக் கூட சாதாரணமாக முடித்து விடுவீர்கள். கவலை என்ற மூன்றெழுத்து அகன்றோடும் நேரம் இது. பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். பொதுவாழ்வில் இருப்பவர்கள், வீண் பழிக்கு ஆளாகாமல் கவனமாக செயற்படுங்கள். தொழில் செய்பவர்கள், வேலை ஆட்களுடன் போராட வேண்டிய சூழல் உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களால் தொல்லை வரலாம். கலைஞர்களுக்கு வாய்ப்புகள், கைநழுவிச் செல்லக் கூடும். மாணவர்களுக்கு மறதி அதிகரிக்கும். பெண்களுக்கு பிரச்சினைகள் ஒன்றன் பின் ஒன்றாக ஏற்படலாம். எதையும் யோசித்துச் செய்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு கூடும். சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்கும்!



**பொது வாழ்வில் ஈடுபட்டு புகழ் குவிக்கும் கடக இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அஷ்டமத்துச் சனி வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். மாதத்தின் இடையில் கண்டகச் சனியாக மாறப்போகிறார். எனவே விரயங்கள் அதிகரிக்கும். வீண் விவகாரங்கள் பலவும் வீடு தேடி வரும். வாகனத் தொல்லைகளால் மன வாட்டம் ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்வதனால், கிடைக்க வேண்டிய சலுகைகள் தாமதப்படும். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றங்களை சந்திக்கக் கூடிய நேரம் இது.

### கடக - சுக்கிரன்

ஆவணி 1 ஆம் திகதி முதல், உங்கள் இராசியான கடகத்திற்கு சுக்கிரன் வருகிறார். சுக - லாபாதிபதியான சுக்கிரன், வக்கிர நிலையில் உங்கள் இராசிக்கு வருவது யோகம்தான். ஆரோக்கியப் பாதிப்பில் இருந்து விடுபடுவீர்கள். தாயின் உடல்நலம் சீராகும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு, புதிய வாகனங்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். பத்திரப் பதிவில் இருந்த தடை அகலும். "புதியதாக சொத்துக்கள் வாங்கலாமா?" என்று சிந்திப்பீர்கள். வெளிநாடு செல்லும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படலாம்.

### கன்னி - செவ்வாய்

ஆவணி 2 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய், சகாய ஸ்தானத்திற்கு வருவதால் அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். உங்கள் மீது குற்றம் சுமத்தியவர்கள் இப்பொழுது விலகிச் செல்வர்.

உற்றார் - உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். மாற்று இனத்தவர்களின் ஆதரவும் திருப்தி தரும். தொழில் வியாபாரம் சூடுபிடிக்கும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்பான பதவிகள் கிடைக்கும். மக்கள் சேவையில் ஈடுபட்டு மகத்தான புகழைப் பெறுவீர்கள்.

### மகர - சனி

சனி பகவான் ஆவணி 7 ஆம் திகதி, மகர இராசிக்கு வக்கிர இயக்கத்தில் செல்கிறார்.




வாக்கிய கணித ரீதியாக வரும் இந்த மாற்றம், வளர்ச்சியில் கொஞ்சம் தளர்ச்சியைக் கொடுக்கலாம்.

கண்டகச் சனி என்பதால், கவலை அதிகரிக்கும். பணப்பற்றாக்குறை ஏற்படும். சில காரியங்களை யோசிக்காமல் செய்துவிட்டு, பிறகு "ஏன் செய்தோம்?" என்று வருத்தப்படுவீர்கள். எதையும் திட்டமிட்டுச் செய்ய முடியாது. தெய்வ வழிபாட்டிலும் கவனம் செலுத்த இயலாது. உற்றார், உறவினர்களின் பகையும், மற்றவர்களின் கருத்து வேறுபாடுகளும் மனதை வாட்டும். அனுபவஸ்தர்கள் மற்றும் அருளாளர்களின் ஆலோசனை கைகொடுக்கும்.

### புதன் வக்கிர நிவர்த்தி

சிம்மத்தில் சஞ்சரித்து வரும் புதன், ஆவணி 15 ஆம் திகதி வக்கிர நிவர்த்தி யாகிறார்.

விரயாதிபதி வக்கிர நிவர்த்தியாவதால் விரயங்கள் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு வீடு மாற்றம், நாடு மாற்றம் வந்து சேரும். 10 இல் குரு இருப்பதால் அதன் பார்வை புதன் மீது பதிகிறது. எனவே காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிக்கு உறுதுணையாக இருப்பீர்கள்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்புகளில் மாற்றம் ஏற்படும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு மறைமுகப் போட்டிகள் உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்களில் தாமதம் ஏற்படும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. தொழில் வளர்ச்சியில் குறுக்கீடுகள் ஏற்படும். வெளிநாடு அல்லது வெளிமாநிலங்களில் இருந்து அழைப்புகள் வந்தாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதப் பிடிவாதத்திற்கு மூளையில்லை. அதனால் யோசிக்க முடியாது. இதயமில்லை. அதனால் உணர முடியாது.
– ஓகானல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மதவாத வழிபாடே தற்போது இலங்கையில் நடக்கிறது

புலம் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரம் என்றார் ஔவைப்பாட்டி. வீரம் என்றால் என்ன என்ற கேள்விக்கு ஔவையார் தந்த பதில் அது.

அதுபோல பக்தி என்றால் என்ன என்ற கேள்வி எழுமாயின் இறைநாட்டம் என்பது அதற்குப் பதிலாக அமையும்.

இறைவனை அடைந்தாக வேண்டும் என்ற இலட்சியத்தோடு தன்னையும் இறைவனையும் இணைப்பதற்கான மார்க்கமே பக்தி.

இங்கு நாம் கூறுகின்ற பக்தி பயபக்தி, வைராக்கிய பக்தி என சாதாரண அடியவர்கள் மத்தியில் வாழ்கிறது.

எதுஎவ்வாறாயினும் இறைவழிபாடு என்பது அன்பு மயமானது. கருணை நிறைந்தது. தன்னுயிர் போல் மன்னுயிர்களை நேசிப்பது.

எனினும் இந்த வழிபாடுகள் ஒரே தன்மை வாய்ந்தவையல்ல. அவரவர் பின்பற்றுகின்ற சமயங்கள், அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள், அவர்களின் வாழ்வியல் முறைமைகள் எனப் பல்வகை அனுபவங்களினூடு வேறுபடுகின்றன.

இவ்வாறு வழிபாடுகள் வேறுபட்டாலும் வழிபாட்டின் இலக்கு ஒன்றுதான். அது இறைவனை அடைதலாகும்.

இங்குதான் இறைவனை அடைகின்ற மார்க்கங்களை ஒவ்வொரு சமயமும் கட்டமைத்துள்ளன.

இந்து சமயம் இல்லறம், துறவறம் எனும் வழிப்பாதைகளினூடாக இறை ஞானத்தைப் பெறுவதற்கு வழிகாட்டுகிறது.

அதேபோல கௌதம புத்தபிரான் துறவு நிலை நின்று ஆசாபாசங்களைத் துறந்து பரிநிர்வாணம் அடைகின்ற பக்குவநிலையை எடுத்தியம்பினார்.

இயேசுபிரான் மற்றவர்களின் பாவங்களைத் தானே சுமந்து மற்றவர்களின் கஷ்டங்களை நீக்கி, அவர்களைத் துன்பத்தினின்றும் விடுவிக்கின்ற வழியைப் போதித்துள்ளார்.

உன்னைப் போல பிறரையும் நேசித்து வாழுகின்ற வாழ்வியலினூடு ஆண்டவரின் கருணைக்கு ஆளாக முடியும் என்பது கத்தோலிக்கத்தில் இயம்பப்படுகிறது.

இஸ்லாம் தனது சமயத்தை மார்க்கம் என்றே அழைக்கிறது. ஐந்து நேரத் தொழுகையும் அவரவர்க்கான கடமையுமாக வகுத்து இறை வழிபாட்டை போதித்து நிற்கும்.

இவ்வாறாக வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு மார்க்கங்களைப் போதித்து மனித சமூகம் கடைத்தேற வழிவகுத்துள்ளது.

இருந்தும் சமகாலத்தில் சமயம் என்பது வழிபாட்டைக் கடந்து மதவாத சேற்றுக்குள் அகப்பட்டுள்ளது.

ஆம், பொதுவில் சமயத் தலைமைகள் ஏதோவொரு வகையில் மதவாதத்தைப் பரப்பிக் கொண்டே இருக்கின்றன.

மதகுருமார் என்போர் அகமும் புறமும் ஒருமித்தவர்களாக இல்லை.

அவர்களின் போதனைக்குள் மதவாத போதை உள்ளது. இஃது நாளாந்தம் மனிதர்களிடையே ஏற்றப்படுகிறது.

சில மத குருமார் வெளிப்படையாகவே மதவாதத் தீயைக் கக்குகின்றனர்.

இதன் விளைவாக இப்போது நம் மண்ணில் வழிபாட்டுக்கும் பக்திக்கும் இடமில்லாமல் போயிற்று.

ஆம், ஒரு காலத்தில் இறை நம்பிக்கையோடு கூடிய வழிபாடு இருந்தது.

ஆனால் இப்போது அந்த வழிபாடு மதவாதத்தைப் பரப்புகின்ற நோக்கோடு இடம்பெறுகிறது.

## சூழல் வெப்பமடைவதனால் மன அழுத்தம் அதிகரிக்கும்

### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

சூழல் வெப்பமடைவதனால் மன அழுத்தம் அதிகரிக்கும் சாத்தியமுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சூழல் வெப்பமடைதல் அதிகரித்துச்செல்லும் நிலையில் மன அழுத்தமும் உக்கிரமடையும் நிலைமை அதிகரித்துச் செல்வதாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் விசேட உளநல வைத்திய நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார். அதிக வெப்பத்துடனான காலநிலை தொடரும்போது ஏற்கனவே நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் உள்நலம் மேலும் சிக்கலுக்குள்ளாகும் நிலை காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

மருந்துகளை உட்கொள்வோர் இவ்வாறான அதிக வெப்பத்துடனான காலப்பகுதியில் அதிகளவு நீரை பருகுவது அத்தியாவசியமானதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உடலில் நீரின் அளவு குறையுமிடத்து அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் அதிகரிக்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே, அனைத்து தரப்பினரும் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டியது கட்டாயமானதென கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் விசேட உளநல வைத்திய நிபுணர் ரூமி ரூபன் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான சதுர்த்தி உற்சவமானது இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகி அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று ,விநாயகப் பெருமானது திருவீதிவலம் இடம்பெறுமென ஆலய பிரதமகுருக்கள் சிவ ஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறியதருகிறார். (ம-7)

## கொக்குவில் மஞ்சவனப்பதியில் வசந்த ரத வெள்ளோட்டம்

(கொக்குவில்)

வரலாற்றுச் சிறப்பு மிகு கொக்குவில் மஞ்சவனப் பதி முருகன் ஆலயத்தில் புதிதாக அமையப்பெற்ற வசந்தரதத்தின் வெள்ளோட்ட பெருவிழாவானது இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பக்தர்கள், மெய்யடியார்கள் யாவரும் கலந்து கொண்டு வசந்த ரத வடம் பிடித்து மஞ்சவனத்து முருகன் அருள் பெற்றிடுமாறு ஆலய தர்மகர்த்தா சபையினர் அழைத்து நிற்கின்றனர். (ம-7)

### தொலைபேசியில் உரையாடியபடி

## தண்டவாளத்தில் நடந்த யுவதி ரயில் மோதிப் பலி

(ஹட்டன்)

கையடக்கத் தொலைபேசியை காதில் வைத்து பேசிக்கொண்டு ரயில்பாதையில் பயணித்த பெண் ஒருவர் ரயிலில் அடிபட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலைக்கும் ஹட்டனுக்கும் இடையிலான 60 அடி பாலத்திற்கு அருகில் பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தில் குறித்த பெண் மோதியுள்ளார்.

அந்த வகையில் உயிரிழந்த பெண்ணின் சடலம் அந்த புகையிரதத்தில் கொட்டகலை புகையிரத நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் சடலம் கொட்டகலை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

உயிரிழந்தவர் ஹட்டன் குடாகம பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## யாழ். நகரில் திருட்டுடன் தொடர்புடைய ஒருவர் கைது

யாழ். நகரில் திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில நாட்களிற்கு முன்னர் யாழ். நகரில் உள்ள மதுபானசாலை ஒன்றினை உடைத்து பணம் திருடப்பட்டிருந்தது.

அதன் பின் கடை ஒன்றின் கூரை பிரித்து மூன்று இலட்சம் ரூபாய் பணம் ஒரு இலட்சம்ரூபா பெறுமதியான சிகரட் என்பனவற்றை திருடியதாக யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி கேவா வசந் தலைமையிலான குழு நேற்றைய தினம் மேலும் ஒரு கடை உடைப்பதற்காக சுத்தியல், சாவிகள் உடன் பை ஒன்றை கொண்டு சென்ற சந்தேகநபரை கைது செய்து விசாரித்த போது ஏனைய திருட்டு சம்பவங்கள் மேற்கொண்டமை தொடர்பில் தெரியவந்துள்ளதுடன் 63 வயதுடைய சந்தேகநபரை கைது செய்து விசாரணை இடம்பெறுவதுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## நாட்டில் அதிகரிக்கும் டெங்கு நோய்த் தாக்கம்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டில் இதுவரை பதிவான டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 60 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

டெங்கு நோய் தடுப்பு பிரிவின் கூற்றுப்படி, 2023 ஆம் ஆண்டில் இதுவரை மொத்தமாக 60,136 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

இதில் அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் கொழும்பு மாவட்டத்தில் 12,886 ஆக பதிவாகியுள்ளனர். மேல் மாகாணத்தில் கிட்டத்தட்ட 30,000 நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இது மாகாணங்களின் அடிப்படையில் மிக அதிக மாகும்.

மேலும், டெங்கு இனப் பெருக்கம் அதிகமுள்ள 43 இடங்களை தொற்று நோயியல் பிரிவு அடையாளம் கண்டுள்ளது. ஓகஸ்ட் மாதத்தில் 3,446 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் இதுவரை 38 இறப்புகள் பதிவாகியுள்ளன. (ம-7)

### போலி ஆவணங்களைத் தயாரித்து

## வாடகை வாகனங்களை விற்பனை செய்த மூவர் கைது

(கொழும்பு)

வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களை வைத்து போலி ஆவணங்களை தயாரித்து, விற்பனை செய்யும் மோசடியில் ஈடுபட்ட பெண் உட்பட மூவரை பாணந்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பாணந்துறை பிரதேசத்தில் நபர் ஒருவரிடமிருந்து வாகனம் ஒன்றை பெற்று போலி ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்ததாக கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் 02 கார்களுடன் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின் போது விற்பனை மற்றும் அடமானம் வைக்கப்பட்ட மேலும் 02 கார்கள், போலியான சாரதி அனுமதிப்பத்திரங்கள் உள்ளிட்ட பல ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் பாணந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (ம-7)

## மட்டக்களப்பில் போலி வெளிநாட்டு முகவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சட்ட விரோத வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவராக செயற்பட்டு வந்த நபரொருவரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கடந்த வருடம் நவம்பர் மாதம் சவுதி அரேபியாவுக்கு வேலைக்கு அனுப்புவதாக கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம், ஒரு இலட்சம் ரூபாயும் இன்னொருவரிடம் 60 ஆயிரம் ரூபா உட்பட ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவை வாங்கி கொண்டு கடந்த 7 மாதங்களாக வெளிநாட்டுக்கு அனுப்புவதாக ஏமாற்றி வந்துள்ள நிலையில் அவருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து, குறித்த போலி முகவரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து பொலிஸார் விசாரணையின் பின்னர் மோசடியில் ஈடுபட்ட மேற்படி முகவரை கைது செய்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் அடையாளங்கள் விகாரை கட்டப்படும் இடமல்ல



## சிறீதரன் எம்.பி

(நெளுக்குளம்)

தொல்பொருள்என்பது அடையாளமாக வைத்து பார்க்க வேண்டியதே தவிர விகாரை கட்டப்பட வேண்டிய இடமல்ல என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற குருந்தூர் மலை பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

மிகப்பெரிய அடாவடிகளுக்கு மத்தியில் குவிக்கப்பட்ட பொலிஸார் சிறப்பு அதிரடிப்படையினருக்கு மத்தியில் குருந்தூர் மலையினை ஆக்கிரமித்திருக்கின்ற பிக்குவின் அடாவடிகள் ஆக்கிரமிப்புக்களுக்கு மத்தியில் பொங்கல் நிகழ்வு எல்லோரின் ஒத்துழைப்புடனும் நடைபெற்றுள்ளது.

பல்வேறுபட்ட தடைகள் இருந்தும் தடைகளை தாண்டி நீதியின் பக்கம் நின்ற முல்லைத்தீவு மாவட்ட நீதித்துறையினுடைய நியாயமான கரிசனைகள் எண்ணத்தில் எடுக்கப்பட்டு நேர்மையாகவும் நேர்த்தியாகவும் நடைபெற்ற இந்த பொங்கலுக்காக எல்லோருக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

தொல்பொருள்என்பது அடையாளமாக வைத்து பார்க்க வேண்டியது. அது விகாரை கட்டப்படவேண்டிய இடமல்ல. இங்கு சிங்கள மக்களுக்கு ஒரு சட்டம், தமிழர்கள் வாழ்கின்ற பூர்வீக நிலங்களுக்கு ஒரு சட்டமாக ஆக்கிரமிப்பாளர்களின் நிலையினை இந்த இடத்தில் பார்கின்றோம். இது தமிழர்களின் இருப்பினையும் எதிர்கால வாழ்வையும் மிகப் பெரிய கேள்விக்குட்படுத்தியுள்ளது.

ஆனாலும் நாங்கள் ஒற்றுமையாக அனைத்து தமிழர்களும் இணைந்து வந்து பொங்கல் நிகழ்வினை முன்னெடுத்தோம். இந்த பொங்கல் நிகழ்வு தொடர்ந்து மாதம் மாதம் நடைபெறும். அதேவேளை மக்களின் இருப்பினையும் அடையாளங்களையும் பேணும் வகையிலும் எங்கள் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

இந்த இடத்தில் பாரம்பரியமான வரலாற்று புகழ்மிக்க சிவாலயம் கட்டுவதற்கான ஏற்பாடுகளையும் நாங்கள் எல்லோரும் இணைந்து முன்னெடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (நி-299)

# முள்ளிவாய்க்கால் பிரச்சினையை ரணில் தடுத்திருப்பார்

## விஜயகலா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

2005 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமிழ் மக்கள் வாக்களித்திருந்தால் முள்ளிவாய்க்கால் பிரச்சினையைத் தடுத்திருக்கலாம் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசிய கட்சி மறுசீரமைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் மாற்றுக் கட்சிகள் விட்ட பிழைகளை சீராக்கி நாட்டை காப்பாற்றிய பொறுப்பு ரணில் விக்கிரமசிங்கவையே சாரும். அச் சந்தர்ப்பத்தில் அவர் கைகொடுக்காவிட்டால் சோமாலியாவை விட மோசமான நிலைக்கு இலங்கை சென்றிருக்கும்.

இதேவேளை 2002 ஆம் ஆண்டு தமிழர்களின் ஆயுத போராட்ட அமைப்பின் ஆயுதத்தை மௌனித்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண செயற்பட்டார். இதேவேளை 2005 ஆம் ஆண்டு எமது கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களித்திருந்தால் முள்ளிவாய்க்கால் பிரச்சினையைக் கூடத் தடுத்து நிறுத்தியிருப்பதுடன் வடக்கு -கிழக்கை ஆண்ட தலைவர்களையும் காப்பாற்றியிருக்கலாம் என தெரிவித்தார். (4-33)

# மஹோற்சவம்

(வவுனியா)

வவுனியா வெளிக்குளம் அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம், நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய பரிபலான சபையினர் அறிவிந்துள்ளனர். (நி)

# மன்னாரில் காணி விடுவிப்பு கூட்டம்; புறக்கணித்த தமிழ் எம்.பிக்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் கீழ் வனவள திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பிலும் அவற்றை விடுவிப்பது தொடர்பிலான கூட்டம் நேற்று தினம் சனிக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமேல் நெறிப்படுத்தலில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது

குறித்த கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பிலும் அவை விடுவிப்பு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

கூட்டம் ஏற்கனவே காணி விடுவிப்பு தொடர்பில் உயர் மட்டங்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் தெரியப்படுத்துவதற்கான கூட்டமாகவே காணப்பட்டது.

அதே நேரம் உள்ளூர் அரச பிரதிநிதிகளினால் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பிலும் இறுதியான விடுவிப்பு தொடர்பிலும் எந்த தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்களை மேலதிக அனுமதிக்காக அனுப்பி வைப்பதற்கான தீர்மானமே மேற்கொள்ளப்பட்டிருந்தது

இந்த நிலையில் குறித்த கூட்டத்திற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்ட போதிலும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு எந்த பயனும் இல்லை என்ற அடிப்படையில் கலந்து கொள்ளவில்லை.

அதேநேரம் இவ்வாறான கூட்டங்களுக்கு உரிய விதத்திலும் உரிய நேரத்திலும் தங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை எனவும் கூட்டங்களில் தங்களது கருத்துக்களை தெரிவிப்பதற்கு அரசதரப்பு அரசியல் பிரதிநிதிகள் வாய்ப்பு வழங்குவதில்லை என்ற அடிப்படையிலேயே தாங்கள் கலந்து கொள்ளாமல் புறக்கணித்ததாகவும் கூட்டத்தில் கலந்து கொள்ளாத தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (4-285)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 350 | 380 | 450 | 400 |
| தக்காளி | 200 | 250 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 280 | 220 | 280 | 250 |
| கரட் | 400 | 480 | 500 | 500 |
| பூசணி | 120 | 120 | 120 | 120 |
| புடோல் | 80 | 80 | 120 | 150 |
| வாழைக்காய் | 180 | 180 | 150 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 | 150 | 180 |
| பாகற்காய் | 450 | 350 | 400 | 350 |
| வெண்டக்காய் | 80 | 80 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 400 | 250 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 240 |
| பீற்றூட் | 120 | 160 | 150 | 160 |
| கறிமிளகாய் | 350 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 350 | 300 | 250 |
| போஞ்சி | 420 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 450 | 450 | 400 | 700 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 120 |

# முள்ளியான் கடற்பரப்பில் 130 கிலோ கஞ்சா மீட்பு

## ஒருவர் கைது

(கிளிநொச்சி)

வடமராட்சி கிழக்கு முள்ளியான் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 130 கிலோ கஞ்சாவுடன் ஒருவரை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

இதன்போது கடத்தலுக்கு பயன்படுத்திய படகு ஒன்றும் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள நபர் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டுவருவதுடன் கைது செய்யப்பட்ட நபரை



கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (4-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணியில்...

வளைவிற்கு அண்மையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைச் சேர்ந்த புவனேஸ்வரன் மனோஜ் (வயது-31) என்ற குடும்பத் தலைவரே சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

அவரது மனைவி மன்னாரைச்சேர்ந்த துரைராஜ் முகுந்தினி (வயது-26) படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)

## விபரீத முடிவெடு...

றது.

இதில் சந்திரமோகன் தேனுஜன் (வயது-22) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி விவேகானந்த நகர் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞன் நேற்று தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

2020 க.பொ.த உயர்தர பரீட்சையில் கணிதப் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றவர் இவர். மொரட்டுவ பல்கலைக்கழக அனுமதி கிடைத்து, அங்கு கல்வி பயிலச் சென்றிருந்தார்.

எனினும், இந்த வருடத்தில் தன்னால் கல்வியை தொடர சிரமமாக இருப்பதாக குறிப்பிட்டு, அடுத்த வருடத்திலிருந்து பல்கலைக்கழக கல்வியை தொடர விரும்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

மன அழுத்தத்திற்கான மருத்துவ ஆலோசனைகளையும் பெற்றுள்ளார்.

இந்த நிலையில் தனது வீட்டில் தற்கொலை செய்துள்ளார். அவரது பெற்றோர்கள் இருவரும் ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,316)

## அரிசிக்கு...

மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இம்மாதப் பருவத்தில் 35000 ஹெக்டேயர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்,

100,000 ஏக்கர் பயிர்கள் சேதமடைந்துள்ள போதிலும் அவ்வாறான அரிசி தட்டுப்பாடு ஏற்படாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

## தமிழ் இளைஞன்...

அஜந்தன் (வயது - 24) என்ற இளைஞரே இவ்வாறு அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் கடந்த 5 வருடங்களாக குடும்பத்தினருடன் கொழும்பில் தங்கி நின்று வேலை புரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் இரு குழுக் களுக்கிடையில் ஏற்பட்ட மோதலிலேயே அவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## இந்த ஆண்டின்...

அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இதேவேளை 2023ஆம் ஆண்டுக்கான நல்லைக்குமரன் மலர்வெளியீடு எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்போது அந்நிகழ்வில் வைத்து 2023ஆம் ஆண்டுக்கான யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்படும். (ம)

## தமிழர் பகுதியில்...

தெரிவித்துள்ளார்.

அத்துடன் தொல்பொருள் திணைக்களம், வனவளத்துறை, இராணுவம் மற்றும் பௌத்த மதகுருமார்களைப் பயன்படுத்தி வடக்குக் கிழக்கு பகுதிகளில் அமைதியற்ற சூழலை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

குருந்தூர்மலை விவகாரத்தை கொண்டு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மறைமுகமான செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே சிவசேனையின் மறவன்புலோ சச்சிதானந்தன் உள்ளிட்ட சைவ மதத் தலைவர்கள் செயற்படுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

பௌத்த பிக்குகள் தொடர்ச்சியாக மதக்கட்டளைகளை மீறிய போதிலும், அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஆனால், தமிழர்களின் சைவ நிகழ்வுகளை கட்டுப்படுத்தும் வகையில் உத்தரவுகளை பிறப்பிக்கும் செயற்பாடுகள் நீதித்துறை அதிகாரத்தை இழிவுபடுத்துவதாகவே அமைந்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## பாதுகாப்பு...

தாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

கடற்படை பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய பாதுகாப்புச் சபைக்கான நவீன பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்குவதற்கான மீளாய்வை ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## இலங்கையின்...

பிரான்ஸ் நாடுகள் இணைந்து பொது மேடையை உருவாகியுள்ளதுடன் சீனா கண்காணிப்பு மட்டத்தில் அதில் கலந்து கொண்டு வருகிறது.

அண்மையில், குறுகிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளுக்காக சீனாவின் உதவியை பெற்று தர தலையீடுகளை மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தார்.

இதற்கு மேலதிகமாக நிதியமைச்சின் அதிகாரிகள், ஜனாதிபதி மற்றும் அண்மையில் சீனாவுக்கு விஜயம் செய்த பிரதமர் உள்ளிட்டோர் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கும் செயற்பாட்டுக்கு உதவுமாறு சீனாவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எவ்வாறாயினும் கடன் மறுசீரமைப்பு என்ற வார்த்தையை கூட சீனா நிராகரித்துள்ளதுடன் கடன் முகாமைத்துவம் என்ற வார்த்தையே மிகவும் பொருத்தமானது எனக் கூறியுள்ளது.

இலங்கை சீனாவுக்கு 7.4 பில்லியன் டொலர் கடனை செலுத்த வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.(ம-7)

## இன...

திருகோணமலையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை தொடர்பில் தற்போது பிரச்சினைகள் எழுந்துள்ளன. இந்த விவகாரத்தை அடிப்படையாக கொண்டு நாட்டின் இனங்களுக்கு இடையில் இன முரண்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

இங்கு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகள் உண்மையில் தொல்பொருள் தொடர்பிலான பிரச்சினையா அல்லது அரசியல் ரீதியிலான பிரச்சினையா? என உங்களிடம் வினவுகிறேன்.

நாட்டில் இவ்வாறான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இனங்களுக்கும், சமயங்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை கிடையாது. 30 வருட காலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக நாம் பல்வேறு துன்பங்களை அனுபவித்தோம்.

அவ்வாறானதொரு இருளான, கறைபடிந்த ஒரு யுகத்தை எதிர்காலத்தில் எமது பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்து விடக்கூடாது. நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே நாங்கள் முயற்சிக்கிறோம். இங்கு வாழும் அனைத்து சமூகங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டை நல்ல முறையில் வழிநடத்திச் செல்லவே எதிர்பார்க்கிறோம். அதற்கான சகல விடயங்களையும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வோம் என்றார். (ம-7)


மெகா பவர்
திகதி 19/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1559
I 07 17 49 63 69
35740

தன நிதானய
திகதி - 2023.08.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1241
V 06 19 41 56 V
47191

லக்கி 7
திகதி 19.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0037
L7 இலக்கம் 0 3
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 6 4 1 3 6 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3453
சீட்டிழுப்பு திகதி 19.08.2023
J 35 36 42 50
J 28278
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.19
சீட்டிழுப்பு இலக்கம் 520
மகரம் 02 07 30 58 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/08/19
சீட்டிழுப்பு இலக்கம் 5211
0 0 1 5 3 4 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2185
வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.19
தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
09 27 65 72 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,935,228.40
"இரண்டாம் வரம்"
02 10 28 57 B
DLB

சனிதா
திகதி 2023.08.19 வெற்றி வாரம் 4346
28 32 37 61 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,770,024.00
"இரண்டாம் வரம்"
13 25 63 67 Y
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3897
வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.19
தினம் சனிக்கிழமை
02 05 21 37
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,908,840/-
"இரண்டாம் வரம்"
17 20 33 58
DLB

கப்ருக
திகதி 19.08.2023 வெற்றி வாரம் 1361
S 21 05 18 53 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.430,055,514.20
"இரண்டாவது வாய்ப்பு"
01 06 49 69 V
DLB
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk

சංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 621
திகதி 2023-08-19
வர்ணம் ஆரஞ்சு நிறம்
T 33 40 62 08
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,379,352.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2011
சீட்டிழுப்பு திகதி : 2023.08.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,674,552/-
10 13 29 73 M
08 20 33 36 E
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Talent Globe (Pvt) Ltd.

இன்று (20.08.2023) நாம் யாழ்ப்பாண அலுவலகத்தில் எமது சேவைகளை ஆரம்பிக்கின்றோம்

Talent Globe

### நாங்கள் பின்வரும் சேவைகளை வழங்குகிறோம்

- மாணவர் விசா Student Visa
- வருகை விசா / Visit (கனடா)
- திறன் விசா Skill (கனடா)
- நிரந்தர குடியிருப்பாளர் PR(கனடா)
- பணி அனுமதி Work Permit (கனடா)
- கலந்தாய்வு இலவசம், முற்பணம் இல்லை.

(16767)

சந்திப்புக்களுக்கு 076 160 4383 ஐ அழைக்கவும்.
(அனுமதி அவசியம்)
ஆர்வமுள்ளவர்கள் எங்களிடம் வந்து பயனடையுங்கள்.

**Talent Globe (Pvt) Ltd**
**925,K.K.S Road,(DTPE Campus)**
**Jaffna**

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன், மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

0016 4765 71347 (கனடா)
0014 3724 46737 (கனடா)
077 240 9276 (தாயகம்)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(16505)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## வேலை வாய்ப்பு

உரும்பிராயில் இயங்கி வரும் Super Market ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

**Billing Cashier - பெண்கள் (Full Time)**

வயது எல்லை : 22-30

சுயவிபரக் கோவையை 077 121 5548 Whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. 077 121 5548

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378**
**076 097 3127**

## PickMe Meter Taxi வேலை வாய்ப்பு

சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ள ஆண்/ பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்

Note- கல்வித்தகைமை மற்றும் சுறுசுறுப்பானவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**077 473 7737**

## இலவச Taxi மீட்டர்

நீங்கள் Taxi ஓட்டுபவர்கள் என்றால் உங்களுக்கான இலவச மீட்டர் எம்மிடம் இருந்து பெறலாம்.

PickMe மீட்டர் Taxi
யாழ்ப்பாண கிளை

**077 473 7737**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு நிலப்பரப்பு

- மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 K மீற்றர் தூரம்
- நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை (5 இலட்சம் ரூபாய்)
- பின் பக்கம் உள்ள காணி 1 பரப்பு 250,000 (இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம்) மட்டும்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று

(16746)

**076 057 0354, 076 826 0354**

## ENGLISH CLASSES

யாழ்.நகரில்

- G.C.E O/L, A/L
- பட்டதாரிகள்
- தொழில்புரிவோர்
- ஆர்வமுள்ளவர்களுக்கு

Grammar & Spoken

(16720)

GANESH B.A

**077 766 8725**

## சிங்கள வகுப்பு

அரசாங்கம், தனியார் துறைகளில் வேலைபார்க்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்காக சிங்கள எழுத்து மற்றும் பேச்சு வகுப்புக்கள்

முதல் வகுப்பு இலவசம்

(16761)

**076 976 5577**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் (K.K.S) 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
புகையிரத நிலையத்தில் இருந்து 1 Km தூரத்தில்

தொடர்பு (16754)

**075 521 3533**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16349)

**T.P:077 544 8503**

## வியாபார கடன் வசதி

நீங்கள் பதிவு செய்யப்பட்ட வியாபாரத்துடன் நடைமுறைக் கணக்கும் பாவிப்பவராக இருந்தால் உடன் அழைக்கவும்

SJ FINANCE

**077 473 7737**

## கட்டட வேலைகள்

உங்கள் வீட்டினை
தரமாகவும்
விரைவாகவும்
கட்டித்தரப்படும்

(16726)

**070 192 4483**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு, கோப்பாய், நல்லூர், ஆனைப்பந்தி பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

(C-7094)

**077 318 9474**

## பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல் (implant). கிளிப் போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்


கம்சியா
பற்சிகிச்சைப் பிரிவில்
(யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக, BOC வங்கிக்கு அருகில்) நடைபெறுகிறது.
578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C-7095)

**077 375 4490**
**077 220 2769**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 51 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.



- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூர்ம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16747)

தொடர்புகளுக்கு:- குரு

**077 874 3204, 077 288 0152, 077 076 0389**

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 245/= | |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg கோதுமை மா | - 185/= | |
| 1 Kg அரிசி மா | - 169/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 148/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= | ~~(1080/=)~~ |
| 400g Anlene | - 1250/= | ~~(1350/=)~~ |
| 300g Family pro | - 810/= | ~~(850/=)~~ |
| 1 Kg Sunlight powder rose | - 360/= | ~~(430/=)~~ |
| அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/=)~~ |




(16772)

அங்கர் Family pro - Promotion இல் கலந்து கொள்ளுங்கள், பரிசுகளை வெல்லுங்கள், குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

**Happy Supermarket**
**0777 8080 30**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org